
# வெள்ளத்துக்கு எண்மர் பலி; மண்சரிவினுல்

Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 10 (1-10-66) இதழ் 232
பராபவ புரட்டாதி 15 ஜ. ஆகிர் 15 சனிக்கிழமை




## இரு சிறுவர் மரணம்

கொழும்பு, வெள்ளி வெள்ளத்தினுல் கண்டி, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் இதுவரை எட்டுப்பேர் பலியாகியுள்ளனர்.

கொழும்பில் களனிகங்கையின் நீர்மட்டம் 8 அடி அங்குலமாக உயர்ந்துள்ளது. இதுபெருவெள்ள அபாய நீர்மட்டத்தையும் தாண்டிவிட்டது. இன்று பிற்பகலில் சிறிதுநேரம் வானம் வெளுத்திருந்ததாயினும் பிற்பகலில் தொடர்ந்து மழைபெய்தது. களனிகங்கையில் ஒன்றரைமணி நேரத்துக்கு ஓர் அங்குல வீதம் நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது.

ஜின்கங்கையிலும் நீர்மட்டம் துரிதமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. காலி மாவட்டத்தில் வெள்ளத்தினுல் சூழப்பட்டுள்ள மக்களை மீட்கவும் வெள்ளத்தில் உணவு உடையின்றித் தவிக்கும் மக்களுக்கு உதவி செய்

(8-ம் பக்கம் பார்க்க)

### சிங்கள ஆசிரியரை அனுப்பும் முடிவிலும்
### போதனுமொழி பிரச்னையிலும், மாற்றம் செய்யாவிடில்

# 'வெளியேறுவதை தவிர வழியில்லை'

## பிரதமருக்கு தமிழரசு எம். பி. க்கள் அறிவிப்பு

கொழும்பு, வெள்

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதென்ற முடிவிலும் பிள்ளைகளின் போதனுமொழியைத் தெரிவுசெய்வதில் பெற்ரோருக்கு உரிமை அளிப்பதென கல்வி வெள்ளை அறிக்கையில் உள்ள அம்சத்திலும் மாற்றமசெய்யாவிடில், தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து விலகி, வெளியிலிருந்து போராடுவதைத்தவிர வேறுவழியில்லை.

இவ்வாறு பிரதமருக்குத் தெரிவிப்பதென்று இன்று திரு. எஸ் ஜே வி. செல்வநாயகத்தின் இல்லத்தில் கூடிய தமிழரசுக்கட்சியின் பார்லிமெண்டரிக் குழு தீர்மானித்தது.

தமிழரசுக்கட்சி பார்லிமெண்டரிக் குழுவின் தூது கோஷ்டியொன்று விரைவில் பிரதமரை நேரில் சந்தித்து சிங்கள ஆசிரியர்களை வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்புவதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் கல்வி போதனு மொழியைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்ரோர்களுக்கு அளிப்பதனுல் ஏற்படக்

(8-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி நேற்று இங்கு இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-ம் பரிசு
11 N 0954 ரூ. 1,00,000

2-ம் பரிசு
46 N 0356 ரூ. 40,000

3-ம் பரிசு
56 D 0558 ரூ. 10,000

(5-ம் பக்கம் பார்க்க)

## குழந்தைகளுக்கான நூல்: ஆசிய நிறுவனம் அன்பளிப்பு

திருநெல்வேலி, வெள்ளி யாழ்ப்பாணம் மத்திய நூல் நிலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் நூல் நிலயத்துக்கான பல தமிழ்ப் புத்தகங்கள் இன்று காலை நூல் நிலயத்துக்கு வந்துசேர்ந்தன. ஆசிய ஸ்தாபனம் அன்பளித்திருக்கும் இத்தமிழ்ப் புத்தகங்களின் பெறுமதி இரண்டாயிரம் ரூபாய் என மதிக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் ஆசிய ஸ்தாபனம் மேலும் வழங்கும் ஒன்பதிஞயிரம் ரூபா பெறுமதியான குழந்தைகளுக்கான ஆங்கில நூல்களும் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொள்ளைலாபம், பதுக்கல் இனிச் சிறைத்தண்டனை

கொழும்பு, வெள்ளி கொள்ளை லாபம் அடிப்பவர்களுக்கும் பொருள்களை பதுக்கி வைத்துக்கொண்டு இல்லையென்று சொல்லும் வர்த்தகர்களுக்கும் இனி சிறைத்தண்டனை விதிக்கப்படவிருக்கிறது. கொள்ளை லாபமடித்ததாகவும் பொருள்களைப் பதுக்கி வைத்ததாகவும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அந்த வர்த்தகர்களுக்கு நான்கு வாரத்திலிருந்து ஆறுவாரத்துக்கு மேற்படாத கடூழியச் சிறைத்தண்டனையும் 7,500 ரூபாய்க்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படு

## ஆக்கூர் ஆனந்தாச்சாரி காலமானுர்

சென்னை, செப், 30 இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவரான திரு. ஆக்கூர் ஆனந்தச்சாரியார் இன் வாலாஜா பேட்டையில் தமது 65-வது வயதில் காலமானுர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டிருந்த இவர் உப்பு சத்தியாக்கிரகத்தில் முன்னின்று உழைத்தவர். பல தடவை சிறை சென்றிருக்கிறார்.

## தொந்தரவு செய்வதாக டாக்டர் செய்தபுகார்
### குழந்தையை பார்க்கச்சென்ற தந்தையை பொலிஸ் விரட்டியது

யாழ்ப்பாணம், சனி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது குழந்தையைப் பார்ப்பதற்கு அச்சமயம் கடமையிலிருக்க வேண்டிய டாக்டரிடம் சென்றபொழுது, டாக்டர் தம்மை ஏசியதுடன் பொலிஸிடம் ஒப்படைத்ததாக அனுராதபுரம் கச்சேரியைச் சேர்ந்த குமாஸ்தா ஒருவர் பொலிஸ் சுப்பிரின்டனுக்குப் புகார் செய்திருக்கிருர்.

ஆஸ்பத்திரியில் நோயாளரைச் சேர்ப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நேரத்துக்குப் பின்னர் இரவில் வந்து டாக்டரைத் தொந்தரவு செய்ததாக டாக்டர் தெரிவித்த புகாரைத் தொடர்ந்து இவரைத் தங்கள் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றியதாக ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அந்தக் குமாஸ்தா பொலிஸ் நிலயத்தில் தாம் தாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ள புகாரை பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

## "தொடம்பே முதலாளிபோல் தூக்கி வீசப்படுவீர்"
### பொலிஸ் சார்ஜன்ட் இப்படி மிரட்டினுராம்

தொடர்ந்து தொந்தரவு செய்தால் தொடம்பே 'முதலாளியைப்போல் தூக்கிஎறியப்படுவீர். பொலிஸ் அதிகாரியென்ருலும்சரி, பிரதம மந்திரியாஞலுஞ்சரி எனக்கு கவலையில்லை. எனக்குத் தேவையானதைச் செய்வேன்.''

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஒரு பொலிஸ் சார்ஜண்ட் தன்னிடம் இப்படிக் கூறியதாக, யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிறிண்டனுக்கு அரசாங்க ஊழியர் ஒருவர் எழுதியுள்ள புகார்க் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம் கச்சேரியைச்சேர்ந்த குமாஸ்தா ஒருவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

கடந்த 27-ந் திகதி இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வார்ட்டிலிருக்கும் எனது மகளைப்பார்க்கப் போனேன். என்னுடன் எனது நண்பனும் வந்திருந்தார்.

இரவில் பார்க்கவேண்டுமானுல் டாக்டரிடம் அனுமதிபெறவேண்டுமென ஆஸ்பத்திரி காவலாளி கூறினுர். நான் ஆஸ்பத்திரிவளவிற்குள் சென்று, ஒரு பெண் அற்றண்டனின் உதவியுடன் டாக்டர் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றேன். டாக்டரின் அறைக்கதவைத்

(8-ம் பக்கம் பார்க்க)

நகைக்ளுக்கு
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: 'யப்பான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**காணி**

தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு பளையகச்சி கண்டி ரோட்டில் 40 ஏக்கர் இளந் தென்னந்தோட்டக் காணி. சென்றவருடம் முதல் காய்க்கத் தொடங்கியுள்ளது. நேரடியாகத்தொடர்பு கொள்ளவும். பூகன்ஸ் 71, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1120

**காணி**

2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. யாழ்ப்பாணம் கண்டிக்குளி பாரதிவீதியில். பரப்பு ரூபா 5,000 விசாரிக்கவும். — பூகன்ஸ் 71. மின்சார நிலைய வீதி, புதிய சந்தை நிலையம், யாழ்ப்பாணம். 1286

**காணி**

மானிப்பாய் தெற்கு இந்துக்கல்லூரிக்கு கிட்டுதலாகவுள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தயவு செய்து S. சபாலிங்கம், லோட்டன் ரோட், மானிப்பாய் எனும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 1287

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுக்கோவை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் வசிபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

**ஒலிபெருக்கி**

கிராம்பியன் அம்புளிபயர் 60 வற்ஸ்-3 யூனிற் 2 கிராம்பியன் மைக்-1 கிராமபோன். நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: ஆனந்தன் சயிக்கிள் வேக்ஸ், 205, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 1285

**கோழித்தீன்...**

கோழித்தீன்-கோழிநோய்க்கு மருந்துகள் லான் கோழி-இனிக்கோழி - W. L. கோழி முட்டைகள் விற்பனைக்குண்டு. அருணா ஏஜென்சி, அளவெட்டி. 1252

## சேவை

**தையல் மெஷின்**

தையல் மெஷின்கள் உங்கள் திருப்திக்கு திருத்திக் கொடுக்கப்படும், உதிரிப் பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம். அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி. 1289

**பாஷாண உத்தியாபனம்**

இருபாலை வேளாதோப்பு மதுர மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பாதுகாவலர் ஸ்ரீலஸ்ரீ பொ. நடராச தேசிகர் அவர்களின் பாஷாண உத்தியாபனம், இடம்: ஷெ கோவில் வீதியிலுள்ள இல்லம். காலம்: 2-10-66 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி. அனைவரும் கலந்துகொள்க. இங்ஙனம் ந. பொன்னையாபிள்ளை, ந. சோமசுந்தரம், வேளாதோப்பு, அம்மன்கோவிலடி. 1188

# மழையினால் விவசாயிகள் கவலை

சாவகச்சேரி, வெள்ளி

கடந்த ஞாயிறு முதல் தொடர்ந்து பெய்தவிடாத மழையால் இப்பகுதி விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர், தென்மராட்சிப் பகுதியில் உள்ள இடங்கள் எல்லாம் ஒரே வெள்ளமாயிருக்கின்றது. கச்சாய் பகுதியில் உள்ளவயல்கள் அனைத்தும் தண்ணீரால் நிரம்பி வீதிமட்டத்திற்குக் காணப்படுகின்றது.

சாவச்சேரி, நுணாவில், தனங்கிளப்பு, மறவன்புலம், தச்சன்தோப்பு, ஆகிய இடங்களில் உள்ள வயல்களில் எருக்குவியல்கள் நீரில் மிதக்கின்றன. சில வயல்களில் நெல்லும் மிதக்கின்றது.

# வானொலி



## கொழும்பு

சனி 10 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம்.

இரவு 6-10 கிராம செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-15 செய்திச் சுருள், 7-30 குங்குமம்-மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச் சித்திரம், 9-30 எங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-15, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
WOMEN oh WOMEN
(Adults Only)
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி-சாவித்திரி
நடித்த
அதிசயத்திருடன்

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
தாராசிங்--கிங்கொங்
நடித்த
மகா பாரதம்

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Jeffrey Hunter
in
NO MAN IS AN ISLAND
(Wa... in color)


# "முதலாம் எதிரி போத்தலால் அடித்தார்"

சாவகச்சேரி, வெள்ளி

இரவு பன்னிரண்டு மணிக்கு மாமியார் போடும் சத்தம் கேட்டது. நான் எழுந்து வீட்டுக்கதவடியில் வந்து பார்த்தபோது முதலாம் எதிரியும் மாமியும் வீட்டு முற்றத்தில் இழுபறிப்படுவதைக்கண்டேன். என்னைக் கண்டதும் முதலாம் எதிரி ஓடிவந்து என்னையும் மனைவியையும் வீட்டினுள் தள்ளி கொட்டனால் எனது தலையில் அடித்தார்.

இவ்வாறு தருமபுரம் தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு பி. ஆர். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த பெருமாள் முத்தையா என்பவர் கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூலை மாதம் 22-ம் திகதி பொ. வைத்திலிங்கம், பொ. ராமன், பொ. சத்திவேல், பொ. பாக்கியம், த. கந்தசாமி ஆகிய ஐவரும் தருமபுரத்தில் வசிக்கும் கோவிந்தன் பாறுவதி வீட்டினுள் நள்ளிரவில் பிரவேசித்து பெருமாள் முத்தையாவிற்கும் மனைவி லட்சுமிக்கும் காயம் விளைவித்ததாகவும் முத்தையாவின் சகோதரிக்கு பலாத்காரம் செய்ய முயன்றதாகவும் புளியம்பொக்கணை கிராமசேவையாளருக்குச் செய்யப்பட்ட புகாரைத்தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிசாரால் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள்சார்பில் புறக்டர் வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வகேட் வ. ந. நவரத்தினம் ஆஜரானார். வழக்காளி தரப்பில் கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. என். பொன்னம்பலம், சார்ஜன்ட் திரு. ரி. ரத்தினசபாபதியின் உதவியுடன் வழக்கை நடத்தினார்.

தொடர்ந்து பி. முத்தையாவும் கோ. பாறுவதியும் சாட்சியமளித்ததின் மேல், மாஜிஸ்திரேட் விசாரணையை அக்டோபர் பத்தாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஜீவனாம்சவழக்கு

வல்வெட்டித்துறை, வெள்ளி

38 வருடங்களுக்கு முன் திருமணம் செய்த ஒருவர் தமது கணவன் மீது ஜீவனாம்சவழக்குத் தொடர்ந்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லியம்மா என்ற பெண், தமக்கு மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும் தான் 38 வருடங்களுக்கு முன் வயிரமுத்து விசுவலிங்கம் என்பவரை விவாகம் செய்ததாகவும் அவர் தற்பொழுது தன்னையும் பிள்ளைகளையும் புறக்கணித்துவிட்டாரென்றும் தமக்கும் பிள்ளைகளுக்கும் மாதமொன்றுக்கு 150 ரூபா வீதம் கட்டவேண்டுமென்றும் கோரி ஜீவனாம்சவழக்கை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார்.

## ஆண்டு விழா

பலாலி, வெள்ளி

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்தலைவிழான் இந்துசமய விருத்திச்சங்கத்தினரின் வருடாந்தக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

தோத்திரப் பாடல்களுடன் கூட்டம் ஆரம்பமானது. தலைவர் ஆரம்பவுரை நிகழ்த்தினார். அவர் இந்து சமய விருத்திச்சங்கத்தின் நோக்கத்தையும் மக்கள் நல்வாழ்வு பற்றியும் எடுத்துரைத்தார். பண்டிதர் கா. நமசிவாயம் "வள்ளுவன் சமயம்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

# விளம்பரம்

**அகில இலங்கை ஆலோசக ஆசிரிய சங்கம்**

தொழிற் சங்கமாகப் பதியப்பட்டுள்ளது

பதிவு இல. 2665

இன்னும் அங்கத்தவராகச் சேராத ஆலோசக ஆசிரியர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்க.

சி. சின்னராசா,
காரியதரிசி
'ரமணி பவனம்'
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். 998


## புதிய காரியாதிகாரி

திருநெல்வேலி, சனி


யாழ்ப்பாணம் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். சிவஞானம் மாவட்ட காணி அதிகாரியாகப் பதவி மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் கிளிநொச்சிப் பகுதிக் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ஏ. புன்னைநாயகம் யாழ்ப்பாணம் காரியாதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சென்ற சில வாரங்களாக யாழ்ப்பாணம் காரியாதிகாரியின் கடமைகளை தலைமைக் காரியாலயக் காரியாதிகாரியான திரு. டபிள்யூ. டி. செல்வரட்ணமும் திரு. எஸ். அருணாசலமும் கவனித்து வந்தார்கள்.


**ராஜேன**
தயாரிப்புகள்
ஆஸ்பத்திரி படுக்கைகள்
ரூ. 180/- ரூ. 185/-




குழந்தைகளின் தொட்டில்கள்



ரூ. 220/-

வைத்திய பரிசோதனை படுக்கைகள்




ரூ. 190/-

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பெனி லிமிட்டெட்,
62, புளூமென்டால் ரோட்
கொழும்பு—13
தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி: 2233...
கிரும்ஸ்: Tea...



**இப்பொழுது திரையிடப்படுகிறது!**
கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (தெஹிவளை) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடோர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பந்தோபஸ்து சபை கோரிக்கை: யுதாண்ட் பரிசீலனை

## பதவியில் நீடிக்கலாமென்று ஐ. நா. வட்டாரங்கள் ஹேஷ்யம்

ஐ: நா. (நியுயோர்க்) செப். 30

நேற்றிரவு இரகசியமான முறையில் கூட்டம் நடத்திய ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை, ஐ. நா. தலைமைக் காரியதரிசியாக யுதாண்டே தொடர்ந்து ஐந்து வருட காலத்துக்குப் பதவி வகிக்க வேண்டுமென்று கோரியுள்ளது.

சோவியத் பிரதிநிதி திரு பிடறிங்கோ தலைமையில் நடைபெற்ற ஐ. நா. பந்தோபஸ்து சபையின் இரகசியக் கூட்டத்துக்கு பதினைந்து நாடுகளின் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

"ஐ. நா. தலைமைக் காரியதரிசியாக யுதாண்டே தொடர்ந்து இருக்க வேண்டுமென்று ஐ. நா. வின் சகல உறுப்பு நாடுகளும் விரும்புவதால் இக் கோரிக்கையை யுதாண்ட் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பந்தோபஸ்து சபைக் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யுதாண்ட் மகிழ்ச்சி

ஐ. நா. தலைமைக் காரியதரிசி நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில் பந்தோபஸ்து சபையின் ஏகமனதான முடிவு குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.

யுதாண்ட் தமது பதவியில் நீடிக்க வேண்டுமென்று கோரி பந்தோபஸ்துசபை வெளியிட்டுள்ள அறிக்கையை யுதாண்ட் கவனமாகப் பரிசிலனை செய்து வருகிறார் என்று ஐ. நா. வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

யுதாண்டின் பதவிக்காலம் நவம்பர் மாதம் 3-ம் திகதியுடன் முடிவடைகிறது. ஆனால் ஐ. நா. மகாசபையின் கூட்டத்தொடர் முடிவடையும் வரை (டிசம்பர் மாதம் வரை) பதவியிலிருப்பதற்கு யுதாண்ட் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

# வட கியூபாவில் குண்டு வீழ்ந்தது

ஹவானு, செப். 30

கியூபாவின் வட கரையோரப்பகுதியில் இனம் தெரியாத விமானமொன்று மூன்று குண்டுகளை வீசியதென்றும் சேதமெதுவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகாநாடு

கம்பாலா, செப். 30

இன்று ஆரம்பமான கிழக்கு ஆபிரிக்கத்தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு தன்ஸானிய அதிபர் ஜூலியஸ் நியாரரே நேற்று இங்கு வந்து சேர்ந்தார்.

(பி.டி.ஸி.)

# இயற்கை மரணம்

சங்கானை, வெள்ளி.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கண்மையில் இருக்கும் பரலையை செய்யும் சி. பொன்னையா (55) வட்டுக்கோட்டைக்கு வேலைக்கு செல்லும் வழியில் பஸ்ஸில் இருந்து இறங்கிச் சிறிது தூரம் நடந்து சென்றபோது திடீரென மயக்கமடைந்தார். இதனைக்கவனித்த அவ்வூர் வாசிகள் சிலர் பக்கத்தில் உள்ள அரசினர் டிஸ்பென்சரிக்கு அவரை எடுத்துச் சென்றனர்.

அங்கே கடமை ஆற்றிக்கொண்டிருந்த அப்போதிக்கரி திரு. வ. கனகரத்தினம் பரிசோதனை செய்தபோது அவர் இறந்துவிட்டதாகக் கூறினார். அப்போதிக்கரி பொலிசாருக்கு கொடுத்த தகவலைத்தொடர்ந்து சங்கானைப் பொலிசார் ஸ்தலத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மரண விசாரணை நடத்திய திரு கே. சேனாதிராசா இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# மழையின் விளைவு

சங்கானை, வெள்ளி.

வலி- மேற்குப்பகுதியில் உள்ள நெற்காணிகள் எல்லாம் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கின்றது. முந்திய வருடங்களில் புரட்டாசி மாசத்தில் இப்படிக் கனத்த மழை பெய்வதில்லை என விவசாயிகள் பேசிக் கொள்கின்றனர். தற்பொழுது இவர்கள் தங்கள் காணிகளில் உள்ள வெள்ளத்தை வெளியேற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். மேலும் தொடர்ந்து மழை பெய்யுமானால் அடுத்த வருடத்திற்கு விதை நெல்லேனும் கிடைக்குமா என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

# போக்குவரத்துகஷ்டம்

சாவகச்சேரி, வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து மறைவன்புலம் ஊடாகக் கச்சாய்வீதியால் கொடிகாமம் செல்லும் பஸ்வீதி அகலம் குறைவானதால் அப்பாதையால் செல்லமுடியாதுஇருக்கின்றது. இதனால் மற்றைய வாகனங்களும் விலத்திச்செல்வதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுசம்ப [illegible] தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார்செய்துள்ளனர்.

# பாகிஸ்தானியருடன் காங்கிரஸினருக்கு தொடர்பா?

## பக்ஷிகுலாம் குற்றச்சாட்டு

ஸ்ரீநகர், செப். 30

பாகிஸ்தான் நாசவேலைகாரர்களுடன் சில காங்கிரஸ்காரர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று காஷ்மீர் முன்னாள் முதன் மந்திரி திரு. பக்ஷிகுலாம் முகம்மட் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் காஷ்மீரில் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புள்ள ஒருவருடைய வீட்டில் பாகிஸ்தான் நாசவேலை கோஷ்டியொன்று கைது செய்யப்பட்டது குறித்து அவர் தெரிவிக்கையில், காங்கிரஸ்கட்சி ஊழியர்கள் சிலர் இந்த கோஷ்டியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று கூறினார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 6 பேர் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புள்ளவர்கள், ஒருவர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர். மற்றும் ஒருவர் இளைஞர் காங்கிரஸின் தலைவர். பாகிஸ்தான் நாசவேலைக்காரர்கள் சோபோர் என்ற இடத்தில் கைதுசெய்யப்பட்டார்கள். அந்த இடத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் சிலர் நாசவேலைகாரர்களுக்கு உதவினர். காஷ்மீர் மந்திரிகளில் ஒருவர், அந்தக் கோஷ்டியிலுள்ள சிலருக்கு உறவுள்ளவர். இந்த உண்மைகளையெல்லாம் பொதுமக்களுக்கு தெரியாமல் அதிகாரிகள் மூடிமறைத்துவிட்டார்கள்" என்றும் திரு. பக்ஷிகுலாம் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் யோசனைகளை ஸ்மித் ஏற்க மறுப்பு

லண்டன், செப். 30

பேச்சுவார்த்தைகள் மூலம் ரொடீஷியப் பிரச்னையை தீர்த்துவைக்கமுடியுமென்று இனிமேல் எதிர்பார்க்கமுடியாது என்று லண்டன் திரும்பிய பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி தெரிவித்துள்ளார்.

ரொடீஷியப் பிரதமர் திரு. அயன்ஸ்மித்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும்பொருட்டு ஸாலிஸ்பரி சென்ற பிரிட்டிஷ் மந்திரிகள் இருவரும் இங்குதிரும்பியுள்ளனர். அவர்கள் பிரிட்டிஷ் பிரதமரிடம் தங்களின் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

"பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த பலனைதையும் கொடுக்கவில்லை. மீண்டுமொரு தடவை முயற்சிப்பதிலும் அதிகபலன் இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ரொடீஷியாவில் பெரும்பான்மை மக்களைக் கொண்ட ஆட்சி நிறுவப்படுவதையும் பிரிட்டிஷ் யோசனைகளை ஏற்கவும் பிரதமர் அயன்ஸ்மித் வன்மையாக எதிர்க்கின்றார்" என்றும் பிரிட்டிஷ் மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

திரு. அயன் ஸ்மித் சட்டப்படி ஆட்சி நிறுவுவதற்கு இன்னும் 5, 6 வாரங்களே இருக்கின்றன. அதன்பின்னர் பிரிட்டன் ஐ. நா. மூலமே நடவடிக்கை எடுக்க முடியும்.

# அண்ணாதுரையின் கேள்விக்கு பக்தவத்சலம் பதில்

செங்கல்பட்டு, செப். 30

"இந்தியாவில் ஜனநாயகத்தைக்காப்பாற்றுவதற்கு ஒரே வழி, மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைகூட்டத்திலை நாட்டுவதே" என்றுசெங்கல்பட்டில் நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர்கள் தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்தநாட்டை காங்கிரஸ்தான் ஆளவேண்டும் என்றால் எட்டுக்கோடி ரூபா செலவு செய்து ஏன் தேர்தல் நடத்தவேண்டும் என்று சென்னையில நடைபெற்ற கூட்ட மொன்றில் திரு. ஸி. என். அண்ணாதுரை கேள்வி கேட்டார். பதினெட்டு ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சிநடத்தி வருகிறது. அது எப்படி என்றால், மக்கள் காங்கிரஸின் மீது வைத்துள்ள நம்பிக்கையினால் தான். மற்றக் கட்சிகளைவிட காங்கிரஸ் எவ்வளவு உயர்ந்தது என்பதை மக்கள் நன்குணர்ந்து விட்டார்கள்" என்று திரு. பக்தவத்சலம் விளக்கினார்.

ஜனநாயகத்தின் அடிப்படையில் உருவாகி சோஷலிஸ பாதையில் காமராஜர் தலைமையில் செல்லும் பெரும் கட்சி காங்கிரஸ். அதுஜனநாயகத்தை மதித்து அதன் வழியில் சட்டதிட்டங்களை அமைத்து செயல்பட்டு வருகிறது. மக்கள் தங்கள் கருத்துக்களை நன்குணர்ந்து காங்கிரஸின் சாதனைகளைத் தெரிந்தபிளபே காங்கிரஸுக்கு வாக்களிக்கிறார்கள்" என்று முதன் மந்திரி குறிப்பிட்டார்.

# சி. பி. ஆர் பூதவுடல் சென்னையில் தகனம்

சென்னை, செப்; 30

கடந்த திங்கட்கிழமை லண்டனில் காலமான டாக்டர் சி. பி. ராமஸ்மிவா ஐயரின் பூதவுடல் நேற்று மாலை இங்கு தகனம் செய்யப் பட்டது.

அவரின் பூதவுடல் லண்டனிலிருந்து ஏர் இந்திய விமானத்தில் பம்பாய்க்குக் கொண்டுவரப்பட்டபின்னர் அங்கிருந்து இந்திய விமானமொன்றில் சென்னைக்கு கொண்டுவரப்பட்டது.

டாக்டர் சி. பி. ராமஸ்வாமியின் பூதவுடல் நேற்று தகனக் கிரியைக்காகக் கொண்டு செல்லப்பட்டபொழுது வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமிநின்று தங்களின் இறுதி மரியாதையைச் செலுத்தினர்,

# பஸ்சேவை சீர்கேடு

பண்டத்தரிப்பு, வெள்ளி

பகிமலை - சண்டிலிப்பாய் பஸ்சேவை மிகவும் சீர்கேடடைந்துள்ளது. இதனால் பாடசாலைப் பிள்ளைகளும் உத்தியோகத்தர்களும் அதிகம் பாதிக்கப் படுகின்றனர். பலமணி நேரமாகக் காத்திருந்தும் பஸ் வராமையால் பிரயாணிகள் வீட்டுக்கே திரும்பி விடுகின்றனர். பாடசாலைப்பிள்ளைகளும் ஆசிரியர்களும் பாடசாலை ஆரம்பித்தபின்னரே பாடசாலைக்குச்செல்லுகின்றனர்.

# ஆசிய - ஆபிரிக்க பிரேரணை ஐ. நா. வில் நிறைவேறியது

ஐ. நா, (நியுயோர்க்) செப். 30.

இன்று சுதந்திரமடைந்த பட்சுவானுலாந்து, மற்றும் பசுட்டோலாந்து சுவாஸிலாந்து ஆகிய வற்றின் நிர்வாகத்தில் தென்னாபிரிக்கா தலையிடக் கூடாது என்று கோரும் தீர்மானம் நேற்றிரவு நடைபெற்ற ஐ. நா. மகாசபை கூட்டத்தில் நிறைவேறியது.

ஆசிய, ஆபிரிக்க நாடுகள் தாக்கல் செய்திருந்த இப் பிரேரணை மீது நேற்றிரவு வாக்கெடுப்பு நடைபெற்ற பொழுது, எண்பத்திநான்கு நாடுகள் ஆதரித்து வாக்களித்தன. தென்னாபிரிக்காவும் போர்த்துக்கல்லும் எதிர்த்து வாக்களித்தன. பிரிட்டன் வாக்கெடுப்பின் கலந்து கொள்ளவில்லை.

பட்சுவானாலாந்து, பசுட்டோலாந்து, சுவாஸிலாந்து ஆகியவற்றில் தென்னாபிரிக்கா தலையிடுமானால் அதனை ஒரு ஆக்கிரமிப்பாகவே ஐ. நா. கருதுமென்று இத் தீர்மானம் கோருகிறது.

இந்த மூன்று நாடுகளும் சிறுபான்மையினரான வெள்ளையர்களை ஆட்சியாகக் கொண்ட தென்னாபிரிக்கா, ரொடீஷிய, போர்த்துக்கல் காலனி அங்கோலா ஆகியவற்றினால் சூழப்பட்டிருக்கிறது.

# "அதிபர் சுகர்ணோ ராஜினமா செய்யவேண்டும்"

## ஒரு லட்சம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

ஜாகர்த்தா, செப். 30

அதிபர் சுகர்ணோ ராஜினமா செய்யவேண்டுமென்று கோரி நேற்று ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் சுகர்ணோ அரண்மனைக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்பொழுது அதிபர் சுகர்ணோ தமது அரண்மனைக்குள் இருந்ததாக செய்திகள் கூறுகின்றன. உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

மாணவர்கள் நீண்டநேரமாக ஆர்ப்பாட்டம் நடத்திய பின்னர் சீனர்கள் வசிக்கும் நகரத்துக்குச் சென்று புத்தகக் கடைகளையும், பொது நிலயங்களையும் தவிடு பொடியாக்கினர். ஏராளமான புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் கிழித்து நாசமாக்கினர் என்றும், அங்கிருந்த சின்னங்களையும் அப்புறப்படுத்தினர் என்றும் ஜாகர்த்தாவுக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

# ஜோன்சன் சந்திப்பார்

வாஷிங்டன், செப். 30

அடுத்த வாரம் அமெரிக்க அதிபர் ஜோன்சன், பிரிட்டிஷ் பிரான்சு, சோவியத் வெளிநாட்டு மந்திரிகளை சந்திப்பார் என்றும் அப்பொழுது நடைபெறும் பேச்சுக்களில் வியட்னும் நெருக்கடி இடம்பெறும் என்றும் வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# குழந்தைகள் கொண்டாட்டம்

ஏதென்ஸ். செப். 30

சம்பளஉயர்வு கோரி 30,000 ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் நேற்று சுமார் 12,00,000 கிரேக்க குழந்தைகள்பாடசாலைக்குச் செல்லவில்லை, இதன் விளைவாக 2000 ஆரம்பப் பாடசாலைகள் மூடப்பட்டன. (பி. டி. ஸி.)

# சுதந்திரமடைந்தது

லண்டன், செப். 30

பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டு கருநீல வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து பட்சுவானுலாந்து இன்று சுதந்திரமடைந்து குடியரசானது. பல நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

என்னைவிட மிக மோசமான கெட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்னை உண்டாக்கியவரையே மறந்து கைவிட்டுவிட்டேன். அவ்வளவு நன்றிகெட்டவன் நான். —சூர்தாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49, JAFFNA.
Telegrams : EELANADU Jaffna: Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி-மீ 15 (1-10-66)


## உலக சிறுவர் தினம்

இன்று உலக சிறுவர் தினம். உலகெங்கும் இத்தினம் கொண்டாடப்படுகிறது. வருடத்தில் ஒரு நாள் சிறுவர் தினம் கொண்டாடுவதுடன் சிறுவர் வாழ்வு மலர்ந்துவிடுமா? சிறுவர் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் வாழ்வதற்கு அவர்களுக்கு வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

சிறுவர் என்பதற்கு முன் குழந்தைகளின் நலனில் முதலில் கவனம் செலுத்தப்படவேண்டும். குழந்தைகளும் சிறுவரும் நாட்டின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய அங்கம் பெறுபவர்கள். அவர்களுடைய உணவிலும் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்தப்படவேண்டும். இப்பொழுது இங்கு பால் நிலையங்கள் இருப்பினும் பாடசாலைகளில் 'பணிஸ்' வழங்கப்படினும் போஷாக்கில்லாத குழந்தைகள் அதிகமுண்டு. போஷாக்கின்மையால் ஏற்படும் நோய்களால் இன்றும் ஒவ்வோர் ஆஸ்பத்திரியிலும் பல குழந்தைகள் சிகிச்சை பெற்றுவருகின்றன. குழந்தைகளினதும், சிறுவர்களினதும் உணவு, ஆரோக்கியம் ஆகியவைகளில் அரசாங்க அதுவும் சோஷலிஸக்கொள்கையுடைய அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டியது அதன் கடமை.

சிறுவர்களுக்கு என்ன வசதிகள் செய்யப்படவேண்டும்? கல்வி வசதி அவர்களுக்கு முக்கியம். இப்பொழுது இலவசக் கல்வி அளிக்கப்படுகிறதென்பது உண்மையே. ஆயினும் தினசரி பிற்பகல் மூன்று மணியிலிருந்து ஆறு மணிவரை அவர்களுடைய நேரம் வீண் விரையமாகிறது. பாடசாலைக்குச் செல்லும் வயதை அடையாத குழந்தைகளுக்கு இங்கு கல்வி பெறும் வசதி குறைவு. யாழ்ப்பாணத்தில் மிக மிகக் குறைவு. இங்கிலாந்து நாட்டில் பாடசாலை செல்லாத பிள்ளைகளில் அறுபது சதவிகிதக் குழந்தைகளுக்குக் கல்விப்போதனையில் பயிற்சி அந்நாட்டுப் பாரம்பரிய முறைப்படி அளிக்கப்படுகின்றது. கல்வி தவிர சிறுவர்களுக்கு விளையாட்டுவசதியோ பூங்காவோ மிகக்குறைவு. இதனால் அவர்கள் தேகாரோக்கியம் பெறவும், உளவிருத்திபெறவும் வாய்ப்பில்லாதிருக்கிறது.

குழந்தைகளுக்கென நூல்நிலையமும், சிறுவர் திரைப்படங்களும், சிறுவர் கலை அரங்கங்களும் சிறுவர்களின் வளர்ச்சிக்கு அவசியத் தேவைகளாகும். இவைதவிர குழந்தைகளும் சிறுவர்களும் மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ்வதற்குப் பெற்றோர் அளவோடு குழந்தைகளைப் பெறுவது மிக மிக அவசியமாகும்.

## ஜவுளி ஆலை

உள்நாட்டு ஜவுளித் தேவையைச் சமாளிப்பதற்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவியுடன் இரு ஜவுளி ஆலைகளை இங்கு நிறுவுவதற்கு கைத்தொழில் அமைச்சு திட்டமிட்டு இதற்கு அரசாங்கத்தின் அனுமதி வேண்டியிருக்கிறதாம.

நமது நாட்டுக்கு இப்போது வருடா வருடம் 19 கோடி யார் பருத்தித் துணி தேவைப்படுவதாகவும் ஆனால் இப்பொழுது ஆறு கோடி யார் துணிதான் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் பத்துக்கோடி யார் துணி இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் மிகுதி மூன்று கோடி யார் துணியை இங்கு உற்பத்திசெய்யவே கைத்தொழில் அமைச்சு இத்திட்டத்தை வகுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவியுடன் இங்கு இரு ஆலைகளை அமைத்துக்கொண்டாலும் துணிகளை உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருளான பருத்திநூல்களுக்கு வெளிநாடுகளைத்தான் எதிர்பார்த்திருக்கவேண்டும்.

இப்பொழுது உள்நாட்டில் பொதுமக்கள் பலரும் பொதுஸ்தாபனங்கள் பலவும் கைத்தறித்துணி உற்பத்தியில் ஈடுபட்டிருப்பினும் போதிய நூல் கிடைக்காததால் கஷ்டமடைகின்றனர். நூல் கிடைக்காததுமட்டுமல்ல வெளிநாடுகளிடமிருந்து ஜவுளி நூலை அரசாங்கமே இறக்குமதி செய்து அதில் இலாபம் வைத்து விற்பதால் கைத்தறி நெசவாளர் அதிகவிலைக்கு நூல் வாங்கி, சிலசமயம், வெளிநாட்டுத் துணிகளின் போட்டியைச் சமாளிக்க நெய்த துணிகளைக் குறைந்த விலைக்கும் விற்கவேண்டி நேரிடுகிறது.

இருபுதிய நெசவு ஆலைகளை இங்கு அமைக்க முன்னர் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக் கூடிய கைத்தறி நெசவுக்கு கைத்தொழில் அமைச்சு ஊக்கமும் உதவியும் அளிக்கவேண்டும். நெசவு நூல் குறைந்த விலையில் தாராளமாகக் கிடைக்க வழிசெய்வதுடன் இறக்குமதித் துணிகளின் விலைகளுக்குக் குறைவாக உள்நாட்டுத் துணிகளை விற்கக்கூடிய முறையில் ஒழுங்கும் வசதியும் செய்யப்படவேண்டும்.

தேசிய ஜவுளிக்கூட்டுத் தாபனம் உள்நாட்டுக் கைத்தறியாளர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டும். வெளிநாட்டுத் துணிகளை இறக்குமதி செய்தும் வெளிநாட்டு நூல்களை இறக்குமதி செய்தும் இலாபம் காட்டுவதில் அர்த்தம் இல்லை.

# தமிழ் இலக்கியம்: மூவர் நோக்கு

இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழாவின் மூன்றாவது நாள் நிகழ்ச்சிகள் சென்ற வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் சென்னை தமிழ் அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி திரு. அ. ச. ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் 'தமிழ் இலக்கியம்' பற்றி திரு. ஞானசம்பந்தன், வித்துவான் பொன். முத்துக்குமாரன், திரு. எஸ். தனஞ்சயராசசிங்கம் ஆகியோர் வெவ்வேறு தலைப்பில் ஆற்றிய உரைகளின் சுருக்கத்தை இங்கு காணலாம். தொகுப்பு- இ. நா.)

திரு. அ. ச. ஞானசம்பந்தனின் தலைமையுரையில் ஒரு பகுதி:

அகில உலகமும் புகழ் பெறக் கூடிய 'சொர்க்க நீக்கம்' என்ற நூலைத்தந்த மில்டன் இன்னோர் நூலின் சமயத்துக்குட்பட்டன் பாடற்ற பிறரது கருத்தை நாடுகின்றான். ஆனால் தமிழன் நூல்கள் சகிப்புத்தன்மை கொண்டு விளங்குகின்றன. ஜைனமதத்தைச் சேர்ந்த இளங்கோவடிகள் சிவமதத்தை புறக்கணிக்காது

''விண்ணோர் அமுதுண்டும்
சாவ - ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டிருந்
தருள் செய்தானை''

என்று சமயச் சார்பற்ற முறையில் ஆலமுண்டானை செய்த அம்பலவாணனைப் பாடுகின்றார்.

மனிதவாழ்வைச் செப்பப்படுத்துவதாகவும். மனிதனை ஆனந்தப் படுத்துவனவாகவும் அமையும் கவிதையை யாத்தவர் தம்மவர். இந்தக் கவிதைப் பண்பு சங்ககாலந்தொடக்கம் இன்றுவரை நீடித்து நிலைபெற்று வருகின்றது.

''சிரங்க நாதனையும் தில்லை
நடராசனையும்
பீரங்கிவைத் திடித்துப்
பிளந்தெறிவ தென்
றோ?''

இந்தக் கவிதை ஒருமுறை போட்டியொன்றுக்காகப் பாடப் பட்டிருந்தது. இப்போட்டியில் வந்த கவிதைகளை ஆராய்ந்து பரிசைத் தெரிவு செய்யும் குழுவில் ஒருவனாகயானிருந்தேன். இந்தக் கவிதையை உள்ளடக்கிய கவிதைக்கு இரண்டாவது பரிசைக் கொடுக்கலாமென்று யான் சிபார்சு செய்தேன். ''என்னப்பா நீயா இதற்குப் பரிசு கொடுப்பதற்குச் சிபார்சு செய்கிறாய்?'' என்று கேட்டார்கள். யான், கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால் கவிதையினூடேயுள்ள சொன்னயமும் அமைப்பும் அது சிறந்த கவிதையாக அமைந்துள்ளதென்பதை காட்டுகின்றன என்றேன். பாட்டின் தன்மையும் கருத்தும் எமக்குடன்படா விடத்து அதனைப் புறக்கணிக்கவேண்டுமா? கருத்தை வைத்து பார்ப்போமானால் நாம் பலவற்றை இழந்துவிட வேண்டியவர்களாவோம். தமிழில் பல மதத்தவர்கள் இலக்கியத்தைப் படைத்திருக்கிறார்கள். தமிழர்கள் சகிப்புத் தன்மையோடு வாழ்ந்தமையே அவர்களது இலக்கியங்கள் சிறப்பதற்கு வழியமைத்தன. இருவர் தம் சொல்லை எழுமுறை கேட்டு இருவரும் பொருந்த உரைக்கின்ற பண்பு தம்மவரிடம் நிலைத்திருந்தது. இந்த நிலையே எம்மிலக்கியங்கள் சிறப்புற வழியமைத்தது.

பல்லவர் காலம் என்னும் பொருள் பற்றிப் பேசிய பொன். முத்துக் குமாரன் குறிப்பிட்டவை:

''தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் பொருளை முன் வைக்காது அன்பை அடிப்படையாகக் கொண்டெழுந்தவையாகும்.

அற்புதமான கவிதை நூல்கள் பல்லவர் காலத்தில் எழுந்தன. தமிழிலக்கியங்கள் ஏனையவற்றை ஒரு தட்டிலும், பல்லவர் கால இலக்கியங்களை இன்னொருதட்டில் வைத்து நிறுப்பின் நிறை சமனடையும்' அத்துணைச் சிறப்புடைய இலக்

(5-ம் பக்கம் பார்க்க)

# தேசிய- (சிங்க) -கொடி

இலங்கையின் தேசியக் கொடியில் வாயைப் பிளந்தபடி காட்சியளிக்கும் சிங்கம் இன்னும் நமது தேசிய சின்னமாகத் தொடர்ந்திருப்பதற்கு வித்தியோதய பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் எதிர்ப்புக் கிளப்பியதாகவும் அந்த எதிர்ப்பு நியாயமானதெனவும் திரு பி. டபிள்யு இரத்னயகா என்பவர் ஆங்கிலத்தினசரி ஒன்றில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

சிங்கத்தை நம்நாட்டின் தேசிய சின்னமாக தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பதற்கு பல ஆதாரங்களை எடுத்துக்காட்டி ஆனையும் தாமரையும் தான் நமது தேசியச் சின்னமாக இருக்கவேண்டுமென்பதை அவர் தமது கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார், சிங்கத்தை அகற்றி ஆனையையும் தாமரைப் பூவையும் தேசிய சின்னமாக்கவேண்டுமென அவர் அரசாங்கத்தைக் கேட்கிறார்.

ஆனை ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் சின்னம். ஆனையைத் தேசிய சின்னமாக்கவேண்டுமெனில் எதிர்க்கட்சியினர் எதிர்ப்புக் கிளப்புவர்என்பது நிச்சயம், இதனால்தான் சிங்கம் சிங்களவரின் சின்னம் அல்ல என்பதை அவர் தமது கட்டுரையில் எடுத்துக் காட்டுகிறார்.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் தேசியக்கொடியிலிருந்து சிங்கத்தை அகற்றுவதை அனைவரும் வரவேற்பர்.

நமது தேசியக் கொடியில் சிறுபான்மையினரைக் குறிக்கும் இரண்டு கோடுகள் கம்பத்தோடு ஒட்டியபடி இடம் பெற்றிருக்கின்றன. இந்த இரு கோடுகளையும் பார்த்தபடி கையில் வாளேந்திக்கொண்டு சிங்கம் வாயைப் பிளந்தபடி நிற்கிறது. சிறுபான்மையினரைப் பயமுறுத்தும் இந்தச் சிங்கத்தை அகற்றுவது தேசிய ஐக்கியம் ஏற்பட உதவி புரியாதா?.

தேசியச் சின்னமான சிங்கம் வாயைப் பிளந்தபடி இருப்பது, எப்போதும் அது பசியிலிருப்பதையே காட்டுவதாகும். இது நாட்டுக்கு நல்லதல்லவே. வாயைப் பிளந்த சிங்கத்தை நமது தேசியக் கொடியிலிருந்து [illegible]

— ஜ.

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே மழை படிப்படியாகக் குறைந்து இது ஒரு பாலைவனமாகிவிடுமென்று சமீபத்தில் ஒரு வெளிநாட்டு நிபுணர் இங்கு வந்து நம்மையெல்லாம் பயமுறுத்திஞரல்லவா? அவர் இப்போது எங்கிருக்கிறாரோ தெரியவில்லை அவரை இங்கு அழைத்து வந்து காட்டவேண்டும் போல் தோன்றுகிறது. இங்கு மழையைப் பார்த்துவிட்டு அந்த நிபுணர் என்ன சொல்லுவாரோ!

கருணையுள்ள தெய்வம் நம்மை ஆட்சி நடத்துகையில், நாம் அவரையே நம்பி வாழ்க்கையில், நம்மை அவர் கைவிட்டுவிடுவாரா? நமக்கு வேண்டியதை அவர் அறிவார். இப்போது மழை பொழிவதும் அவரது அருளால்தானே! அல்லது நமது கெட்டித்தனமா?

ஃ ஃ ஃ

கொழும்பிலே மழை அதிகமாகப் பெய்து, வெள்ளத்தால் பல்லாயிரக்கணக்கானவர் தவிப்பதைக் கண்டேன். களனி (கல்யாணி) கங்கையிலே வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பக்கத்திலுள்ள வீடுகளெல்லாம் மேற்கூரைவரையிலும்வெள்ளத்தில்மூழ்கிக்கிடக்கின்றன குழந்தைகுட்டிகளுடன் இரண்டொரு பெட்டிகளை எடுத்துக்கொண்டு பல குடும்பத்தினர் படகிலே ரயில்பாதையில் வந்து ஏறுகின்றனர். படுக்கை முதலிய எவ்வளவு சாமான்களை அவர்கள் அப்படியே வீட்டுடன் விட்டுவிட்டு வந்தனரோ! மழை நல்லதுதான்; ஆனால் ஏன் இப்படி அதிகமாகப் பெய்து மக்களைத் தவிக்கவிடவேண்டும் என்று கேட்டதற்கு, மக்களில் பலர் வாழ்க்கையிலே நிதானமில்லாமல், கோணல்வழிகளில் அதிகமாகச் செல்லுவதால் தான் இந்தத் தண்டனை என்கிறார் ஒரு பெரியார். பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கை விபத்துக்கள், இறைவனால் நமக்கு அளிக்கப்படும் தண்டனை என்றும், நமது குற்றங்களை உணர்ந்து நாம் திருந்த வேண்டுமென்றும் கூறுவார் காந்தி அடிகள். ஒன்றும் புரியவில்லை. நாம் குற்றம் செய்யாமல், எல்லாம்வல்ல அந்தக் கடவுள்தான் நம்மைக் காக்கவேண்டும். நாம் செய்யும் குற்றங்களை நமக்கு உணர்த்தி, அவற்றைத் திருத்திக்கொள்ளும்படி செய்யவேண்டியதும் அவரேதான். நமக்குத்தான் நமது குற்றங்கள் தெரியாதே! நம்மில் ஒவ்வொருவரும் நம்மை பரிசுற்றவான்களென்று தானே நினைத்துக்கொண்டிருக்கிறோம்!

ஃ ஃ ஃ

இந்தியா செல்லும் பிரயாணிகள் தலா இருபது (இந்திய) ரூபாய் வரை கொண்டுசெல்ல இதுவரை அனுமதிக்கப்பட்டனராம். ஆனால் பலாலி விமானநிலையத்திலே சென்ற சில நாட்களாக கஸ்டம்ஸ் அதிகாரிகள், இதை அனுமதிப்பதில்லையென்றும், அவர்கள் கெடுபிடி அதிகமாக இருப்பதாயும் ஓர் அன்பர் வந்து புகார் கூறினார். இது உண்மைதானா?

நாட்டின் செலாவணியைப் பாதுகாக்கவேண்டியதுதான். அதேசமயம் கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு

(5-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால் தாமதம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து பண்டத்தரிப்பு இளவாலைக்குவரும் தபால்தாமதமாகவே வருகிறது. பண்டத்தரிப்பு மாதகல் தயாற்கந்தோர்களுக்கும் இக்கதியே ஏற்பட்டுள்ளது. தாமதமாக தபால்கிடைப்பதால் தபால் ஊழியர் கடிதங்களை நேரத்துடன் பட்டுவாடா செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர். பொதுமக்களும்நேரத்துடன்பதில் எழுதவோ அன்றி பணம்பெறவோ முடியாதநிலைக்குள்ளாகிறார்கள்.

---

## தமிழ் இலக்கியம்; ...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

இயங்கள் பல்லவர்காலத்தில் தோன்றின. சிறந்த முத்தொள்ளாயிரம் பல்லவர் காலத்திலே தான் தோன்றியது. விழுமிதான இந்நூல் பழமையைப் பேணி நிற்கின்றது. பிற்கால இலக்கியங்கள் நலம்பெற இந்நூல் அடித்தளமாக அமைந்திருக்கின்றது. பாரதி போன்ற புதுயுகக் கவிஞன் கண்ணன் பாடல் போன்ற உயரிய பாடல்களை யாப்பதற்கு பல்லவர் கால இலக்கியம் வழிவகுத்துள்ளது.

சோழர் காலம் பற்றிப் பேசிய திரு. தனஞ்செயராசசிங்கம் கூறியவை பின்வருமாறு:

சோழர் காலத்தில் தவம் மிக்க புலவர்கள் தோன்றினர். கம்பராமாயணம் சிவகசிந்தாமணி போன்ற உயரிய நூல்கள் தோன்றின. அணியிலக்கண நூல் இக்காலத்தில் தோன்றியமையால் கம்பன், திருத்தக்கதேவர் முதலிய கவிஞர்கள் சொல் நயமும் உவமைநயமும்சிறக்ககவிதைகளை யாப்பதற்குவழி கோலின.

இறுதியாக சங்ககாலம் பற்றிப் பேசிய அ. ச. ஞானசம்பந்தன் குறிப்பிட்டவை: விருப்பு வெறுப்புக்களை விட்டு காட்டைய வேண்டுமென்பதை விடுத்து மனிதன் வாழ்வை செம்மைப்படுத்தும் கருத்துக்களை வலியுறுத்துவனவாக சங்க கால இலக்கியங்கள் விளங்குகின்றன. புறம்— அகம், அகத்துக்கும் புறத்துக்கும் அப்பாற்பட்டதில்லை, மனித வாழ்வு இவற்றை அடியொற்றியே சங்ககால இலக்கியங்கள் செல்கின்றன. எலியைப்போல் வாழாது, புலியைப் போல் முயற்சியுடையோராய் வாழ்கின்ற வாழ்வே மனித வாழ்வாகவேண்டுமென்பது முன்னவர் குறிக்கோள். "யாதுமூரே யாவரும் கேளிர்" என்ற அடிப்படைக் கருத்துக்கு அமைய அவர்கள்வாழ்ந்தார்கள்.

ஈயென இரத்தல் இழிந்தன்று கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று கொள்ளேன் என்று மறுத்தலே உயர்வாகும் என்ற குறிக்கோள் வாழ்வைக் கொண்டவர் தமிழர். தமிழ் இலக்கியங்களின் அகத்துறை பற்றி எச்சபையினரும் வெட்கப்படாமுறையில் சபையில் பேசமுடியும். ஆனால் மேனாட்டார் பாலுணர்வு பற்றிக் கூறுவதற்கு இடம் காலம் என்பனவற்றைநோக்குவர். நமது அகத்துறை புனிதம் வாய்ந்தாக அமைந்துள்ளது.

பாலும் கசந்ததடி சகியே என்று பாரதி பாடுகின்ற சுகவாழ்வின் சிறப்புக்கு சங்ககால இலக்கியங்களே வழிவகுத்தனவாகும். மலரினும் மெல்லிது காமம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். செவ்வி நோக்கித் தலைப்படுகின்ற உயர்வான குறிக்கோள் மக்களை வழி நடத்தியது. ——

# "பெரியபுராணம் தேசீய இலக்கியம்"

## ஆசிரிய பயிற்சி கலாசாலையில் அ. ச. ஞானசம்பந்தன் உரை

யாழ்ப்பாணம், சனி

பெரியபுராணம் ஒருதேசிய இலக்கியமாகும். இதில் அடங்கிய உண்மைத் தத்துவங்கள் தமிழ்மக்களுக்கு மட்டுமன்றி உலகமக்களுக்கே ஓர் ஒப்பற்ற கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. தோடுடையசெவியன் என எடுத்த எடுப்பிலேயேபெண்ணிற்கு முதன்மை அளித்த ஞானசம்பந்தருக்கு சேக்கிழார் ஆயிரம் பாடல்களை ஒதுக்கியுள்ளார்

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பெரியபுராணச் சிறப்பு பற்றிப் பேசும்போது பேராசிரியர்திரு. அ. ச. ஞானசம்பந்தன்மேற்கண்டவாறுகூறினார். இக் கூட்டம் கல்லூரி அதிபர் வி. எஸ். விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது, திருஞானசம்பந்தன்மேலும் கூறியதாவது:-

நம் தமிழ்நாடு தமிழ்மொழி தமிழ்ப்பண்பாடு அன்று இருவர்தோன்றியிருக்காவிட்டால் இன்று எந்நிலைமையில் இருக்கும்என்று சொல்லமுடியாது. இன்று நாம்பெருமையுடன் பேணவைசெய்த குரவர் ஞானசம்பந்தரும் சேக்கிழாருமேயாகும், முக்திக்கு நாயகி பெண்பிள்ளை' எனத்தமிழ்ச் சமுதாயம் பெருமதிப்பைக் கொடுத்த தாய்க்குலத்தினை சமணர் பாயமூட்டை என ஒதுக்கினர். இந்நிலையில் சம்பந்தர் தார்க்கரீதியாகநின்று பெண்ணிற்கும் தமிழிற்கும் முதன்மைகொடுத்து சைவத்தை வளர்த்தார். பெரிய புராணத்திலுள்ள 63 நாயன்மார்களின் வரலாற்றிலும் பெரிய தத்துவங்கள் புதைந்திருக்கின்றன.

பெரிய படைத்தலைவருக இருந்து கடமையினால் பல மனிதர்களை வாளுக்கிரையாக்கி வெற்றியீட்டியசிறுத்தொண்டரை தம்குழந்தையை உவப்போடு சமைத்துத்தாரும் எனக்கேட்கிறார் இறைவன். இவ் உயர்ந்த தத்துவத்தைக்கேட்ட மேல்நாட்டினரே பெரியபுராணத்தின் சிறப்பை வியக்கின்றனர்' குறிக்கோள் இல்லாத தமிழ்நாடு குட்டிச்சுவராகியபோது சிந்தாமணி காவியச்சுவையில் தமிழினம் தோய்ந்திருந்த போது வேளோர்பக்திக்காவியத்தை சேக்கிழார் ஆக்கினர். தமிழ்நாட்டைப் பாதுகாத்தார். 63 நாயன்மார்களின் வாழ்க்கையும் குறிக்கோள்உடைய வாழ்க்கையாகஅமைந்திருக்கிறது. கொள்கையை விடாது அவர்கள் உயிரை விடமுன் [வந்தனர். பண்டிதர் எல் இராசையாதன்றியுரை கூறினர்.

---

## இன்று

யாழ்ப்பாணம், சனி

இன்று சனிக்கிழமைமாலை 7 மணிக்கு வழக்கம்பரை அம்மன்கோவில் மண்டபத்தில் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் "சேக்கிழாரின்சிறப்புக்கள் என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவார்.

—

## ஐயா றன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது பகுத்தறிவும் மனிதாபிமானமும் தேவையாகும். இலங்கையிலிருந்து விமானத்துக்கு அதிக கட்டணம் செலுத்தி வெளிநாடு செல்லுகிறவர், அங்கு இறங்கியதும் பசி தாகம் வந்தால் என் செய்வர்? ஊர்போய்ச் சேரவாவது காசு வேண்டாமா? இதை எல்லாம் கருதித்தான் இருபது ரூபாய்வரை அனுமதிக்கலாமென்று கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு அதிகாரமளித்திருந்தனர். அந்தச் சலுகையை ஏன் இப்போது திடீரென பலாலியில் நிறுத்தவேண்டும்? இதற்கு எந்த அதிகாரி பொறுப்போ தெரியவில்லை. அது யாராயினும் சரி. இது மனிதாபிமான மற்ற அற்ப புத்திக்காரரின் செயலேயாகும். முக்கியமான பதவிகளில் சின்னப் புத்திக்காரரை வைப்பதால் மக்களுக்கு எவ்வளவு ஆபத்து!

உணவுக்கும் உடைக்கு மாககோடிக்கணக்கில் நமது செல்வத்தை வெளியேற்றுகிறோம். நமது உணவு உடைகளை இங்கேயே உற்பத்தி செய்வதாயின் நம் செலாவணியைப் பெரிதும் மிச்சப்படுத்தலாம். அதை விட்டு, வெளிநாடு செல்லும் நம்மவர்களை வீண் இம்சைகளுக்கு உட்படுத்துவது அழகல்ல. நமது பிரதிநிதிகள் இதை உடன் கவனிப்பார்களா?

ஃ ஃ ஃ

நற்றமிழ் ஞானசம்பந்தன்
நான் மறை
கற்றவன் காழியர்
மன்னன் உன்னிய
அற்றமில்மாலையீரைந்தும்
அஞ்செழுத்
துற்றன வல்லவர்
உம்பராவரே.
— திருஞானசம்பந்த
சுவாமிகள்'

---

ஆசிரியருக்குக் கடிதம்

## இராமநாதன் இசைக்கல்லூரி

ஈழநாடு 29.9.66 இதழில் வி. என். பியின் கட்டுரை வாசித்தேன். மகிழ்ச்சி. இந்தியா செல்லாமல் கர்நாடக சங்கீதத்தில் செல்வி. ஜெகதாம்பிகை. உச்சநிலை அடைந்தகாரணம் அவர்கள்கெட்டித்தனமும் அவர்களின் உபாத்தியாயர்களும் என்று கூறலாம். இது சம்பந்தமாக, காலம் சென்ற கலாநிதி க. நடேசபிள்ளை தமது தீர்க்கதரிசனத்தால் இராமநாதன் இசைக் கல்லூரியை உருவாக்கி தகுதியுடைய உபாத்தியாயரை அமர்த்தி சேவைசெய்ததை ஈழம் ஒருபொழுதும் மறக்க முடியாது.

அவர்மறைவிற்குப்பிறகு அவரின் இலட்சியங்களை மறந்து தற்பொழுது நடத்தும் நிர்வாகக்குழு இக்கல்லூரியைசரிவர நடத்தவில்லையென்று பலருக்கு ஏமாற்றம்.

உண்மை ஊழியர்கள்முன் வந்து இக்கல்லூரியை முன்னிருந்த நிலைக்குக்கொண்டு வர முன் வர வேண்டும். இதுவேகாலஞ்சென்றநடேசபிள்ளைக்கு தமிழ் மக்கள் செய்யும் மரியாதையாகும்.

ச. தி. ராசா

யாழ்ப்பாணம்
30. 9. 66

---

## பின்போடப்பட்டது

பலாலி, வெள்ளி

நாளை தொடங்கவிருந்த தொழில்நுட்பக்கல்லூரி இம் மாதம் 7ம் திகதிக்கு பின் போடப்பட்டுள்ளது. பரீட்சை முடிவுகள் சம்பந்தமா... வும் தெரியவருகிறது.

# சுருட்டு உற்பத்தியாளருக்கு விற்பனைவரி 'விலக்கு

யாழ்ப்பாணம். சனி

சுருட்டு உற்பத்தியாளருக்கு விதிக்கப்பட்ட விற்பனை வரி நீக்கப்படும். இதற்கான அறிவித்தல் விரைவில் வர்த்தமானியில்வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விற்பனை வரி சம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்திடம், வருமானவரி கமிஷனர் திரு. சிற்றம்பலம் மேற்கண்ட வாக்குறுதியை அளித்தார் எனத் தெரிகிறது.

சுருட்டு உற்பத்தியாளருக்கு சில சலுகைகள் வழங்கும்பொருட்டு சில சிபார்சுகளை, தான் நிதிமந்திரியிடம் சமர்ப்பித்துள்ளதாகவும்; இவ்விஷயமாக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும், அவசியமானால் வர்த்தமானியில் அறிவிப்பதாகவும் கமிஷனர். உடுப்பிட்டி எம். பி.யிடம் கூறினர்.

விற்பனை வரி காரணமாக தாவடி நல்லூர், சுதுமலை, கந்தர்மடம் அளவெட்டி. வடமராட்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இவர்களில் பலர் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்

# யாழ்ப்பாணத்திலிருந்து பால் மாவு கடத்தலாம்

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு இப்பொழுது மற்றுமொரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு ரூத்தலுக்குக் கூடுதலான பால் மாவை இங்கிருந்து எவரும் வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லக்கூடாதென்று வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து தென்னிந்தியாவுக்குச் செல்பவர்கள் தங்களுடன் கூடுதலான நிறைகொண்ட பால்மாவு டின்களைக் கொண்டுசென்று அங்கு அதிகமான விலைக்கு விற்பனை செய்வதைத் தொடர்ந்தே புதிய கட்டுப்பாட்டைத் தாங்கள் கொண்டுவந்ததாக வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏராளமான பால்மாவு உணவு வெளிநாட்டுக்குக் குறிப்பாக இந்தியாவுக்குக் கடத்தப்படுகிறதென்று புகார் செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிவித்த மந்திரி, இதுபற்றி விசாரணைகள் நடத்துமாறு பொலிஸாரைக் கேட்டுள்ளதாகக் கூறினர்.

---

## இங்கே கூ. மொ. வி. சேலைகள் இல்லை

யாழ்ப்பாணம், சனி.

துணிக்கட்டுப்பாட்டு விலை நடைமுறைக்கு வந்த பின்னர் கூ. மொ. வி. ஸ்தாபனத்தினால் விலை நிர்ணயிக்கும் வரை விற்கப்படாத சேலைகள் இன்று விற்பனையாகுமென்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் இச்சேலைகள் விற்பனைசெய்வதற்கு கூ. மொ. வி. நிலையங்களுக்கு அனுப்பப்படவில்லையெனத் தெரியவருகிறது.

இதுபற்றி நமது நிருபர் யாழ்ப்பாண கூ. மொ. நிலையத்திலும் ப. நோ. கூ. சமாஜத்திலும் விசாரித்த போது சேலைகள் தங்களுக்கு கிடைக்கவில்லை யென தெரிவித்தனர்.

---

## சுவீப் முடிவுகள்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

தலா ரூபா 1,415-80 ஆறுதல் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 51 Q 0300 | 02 T 0826 |
| 09 Q 0763 | 24 B 0822 |
| 06 M 0819 | 56 L 0967 |
| 51 X 0650 | 36 G 0591 |
| 36 N 0091 | 04 C 0133 |
| 36 X 0221 | 53 S 0367 |
| 53 U 0973 | 27 B 0405 |
| 38 Z 0838 | 30 P 0489 |
| 17 C 0290 | 29 Z 0206 |
| 35 G 0300 | 24 K 0676 |
| 20 M 0728 | 14 W 0907 |
| 16 F 0360 | 03 S 0208 |
| 49 C 0209 | 35 Q 0644 |
| 55 O 0281 | 10 C 0910 |
| 04 N 0067 | 16 J 0613 |
| 46 U 0266 | 07 D 0014 |
| 32 R 0175 | 45 M 0359 |
| 50 O 0782 | 03 D 0431 |
| 40 D 0442 | 32 S 0922 |
| 38 B 0508 | 52 F 0756 |
| 23 N 0818 | 25 F 0247 |
| 31 O 0467 | 22 B 0049 |
| 09 M 0415 | 16 C 0071 |
| 13 X 0895 | 54 L 0354 |
| 50 U 0430 | 50 K 0778 |
| 40 D 0420 | 12 W 0653 |
| 37 H 0375 | 13 B 0571 |
| 37 Q 0770 | 21 G 0024 |
| 17 O 0001 | 35 H 0832 |
| 01 S 0685 | 01 K 0515 |
| 59 T 0582 | 34 P 0141 |
| 40 V 0481 | 41 U 0768 |
| 24 P 0902 | 57 A 0043 |
| 06 J 0629 | 57 C 0893 |
| 45 T 0372 | 09 D 0348 |
| 41 E 0012 | 50 F 0398 |
| 50 N 0772 | 06 Q 0320 |
| 54 K 0645 | 27 D 0834 |
| 15 M 0441 | 06 Y 0886 |
| 48 G 0317 | 21 V 0089 |
| 05 Z 0676 | 23 L 0123 |
| 10 P 0824 | 50 E 0077 |
| 01 U 0248 | 08 Y 0832 |
| 25 A 0468 | 60 H 0941 |
| 18 P 0968 | 01 K 0821 |
| 15 D 0049 | 36 N 0060 |
| 48 J 0083 | 17 P 0977 |
| 05 S 0863 | 21 Q 0198 |
| 48 R 0876 | 51 L 0591 |
| 54 E 0351 | 06 N 0673 |

## தவறு யாருடையது

பலாலி, வெள்ளி

பணத்தை மாதாமாதம் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டாவிட்டால் இயந்திரப் படகு பறிமுதல் செய்யப்படும்' என்ற கடிதமொன்று சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவாரன தம்பு பராராஜசிங்கம் என்பவருக்கு மீன்பிடி இலாகாவினால் அனுப்பப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றசூறாவளியின் போது பரராஜசிங்கத்தின் இயந்திரப் படகு கடலில் மூழ்கியதால் அவரிடம் தற்பொழுது படகுஇல்லை யென்பதுகுறிப்பிடதக்கது. மீன்பிடி இலாகாவிடமிருந்து கடன் பெற்று வாங்கிய இயந்திரப் படகுகளை சூறாவளியின் போது இழந்தவர்களிடம் அப்பணத்தை திருப்பி பெறுவதில்லை யென அரசாங்கம் முடிவுசெய்திருந்த போதிலும் இக்கடிதம் அனுப்பப்பட்டதற்கானகாரணம் தெரியவில்லை. இது சம்பந்தமாக இவர் மீன்பிடி தலைமை காரியாலயத்திற்கு அறிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## புதிய கல்வி நிர்வாகம்

யாழ்ப்பாணம், சனி

உயர் கல்வி மசோதா சட்டமானதைத் தொடர்ந்து நாட்டின் புதிய கல்வி நிர்வாகம் இன்று முதல் செயல்படத் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடும் நாமும்

## பனையே! நீ வாழி!

— எஸ். எம். யோசேப் —

தேடுவா ரின்றிக் காடாய்த்
தெரிந்திடும் ஆனால் எங்கள்
நாடாது வாழக் கோடி
நன்மைகள் நல்கும் நா
வாடிடும் ஏழைக் கேற்ற
துணையென ஆகி நிற்கும்
ஈடிலா செல்வம் எங்கள்
இலங்கிடும் பனைக ளாமே!

பாயெனும் படுக்கை யாகும்
படலையும் வேலி யாகும்
சேய்களே விரும்பி உண்ணும்
சீரிய பழமாய் ஆகும்
தாயர்கள் அடுப்பெ ரிக்கத்
தகுந்ததோர் விறகும் ஆகி
ஓயவே செய்யா தென்றும்
உயர்தரு பனையே யாகும்.

வீட்டுள வனைக ளாகும்
வெண்காயம் கட்டு கூடாய்
நாட்டினர்க் குதவும் நன்னீர்
நாம்பெறு துலாவாம் இன்பம்
ஊட்டுநல் சுவைநுங் காக
உதவிடும், பூரா னாகி
காட்டிடும் கனிவை, எமக்க
கற்பக தருவி தாகும்.

வலுவிலார் வாய்ப்பேச் சுக்கும்
வயதுளார் வீரத் துக்கும்
பலமதை உதவும் தெய்வப்
பனையிது ஆனால் வீட்டின்
கொலுவினைக் குலைத்து நல்ல
குழந்தைகள் மனைவி யோடு
உலகினில் அலைவ தற்கு
உதவிடும் மதுவை யாமே!

வயிறார உணவு! வற்றாமல் வாரி வழங்கும் கடல்

# பயங்கரப் பஞ்சத்திற்கு அணைபோடும் மீன்கள்

— குந்தர் வெல்லர் —

உலகில் பெரும்பாலான நாடுகளில் உணவு நெருக்கடி இருந்துவருகிறது. உலகில் மக்கள் தொகைப் பெருக்க வேகத்துடன் ஒப்பிடும் போது, உணவு உற்பத்தி அதிகரிப்பு போதவே போதாது; உணவுக்காக ஏங்கும் வயிறுகளின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. பல வயிறுகளுக்கு அரை குறைச் சாப்பாடும், சத்துக் குறைந்த 'சக்கைச் சாப்பாடு' தான் கிடைக்கிறது. உலக நாடுகளின் பொது எதிரியான பட்டினியை ஒழித்துக்கட்டுவதற்கான வழி என்ன? என்பதை ஆராய, சமீபத்தில் ஹாம்பர்க் நகரில் 72 நாடுகளைச் சேர்ந்த இரண்டாயிரம் நிபுணர்கள் ஒன்று கூடினார்கள். உணவு நெருக்கடியை சமாளிப்பதற்கான வழி முறைகள் மட்டுமன்றி, மக்களுக்கு சத்தான உணவு கிடைப்பதற்கான வழி என்ன என்பது குறித்தும் ஆராய்ந்தார்கள்.

சத்துணவு ஆராய்ச்சி, பசியை மட்டுமன்றி, சத்துக் குறைவையும் போக்கக்கூடியது. எனவே சீரான சத்துணவை முறையாகத் தயாரிப்பது எப்படி என்பதை மக்களுக்கு கற்றுக்கொடுப்பது, முக்கியமானதாகும். உணவு உட்கொள்ளும் முறைகளில் முக்கியமான சீர்திருத்தங்கள் தேவை. ஆனால் அரசியல், சமூக. பொருளாதார காரணங்களினால், தொழில் முன்னேற்ற நாடுகளிலும் சரி, பின் தங்கிய நாடுகளிலும் சரி, இவை மேற்கொள்ளப்படவில்லை. உணவை முறையாகப் பயன்படுத்தினால், சத்துக் குறைவை நிச்சயமாகப் போக்க முடியும் என்று மகாநாட்டில் நிபுணர்கள் வலியுறுத்தினார்கள்.

உலகில் மக்கள் தொகை நாள்தோறும் பெருகிக் கொண்டே போகும் போது, அனைவருக்கும் உணவுக்கு எங்கே போவது? 'நான் இருக்க, கவலை ஏன் என்று கடல் ஆர்ப்பரிக்கிறது. உலகில் 72 சதவீத இடம், கடலால் சூழப்பட்டிருக்கிறது. இக்கடலில் ஏராளமான உணவு இருக்கிறது ஏற்கனவே சர்க்கரை. கொழுப்பு சத்துக்களைச் செயற்கையாகத் தயாரிக்கமுடிகிறது. எனவே மக்களுக்குத்தேவையான புரத சத்தைக் கடலிலிருந்து பெறலாம். மனித உணவாகப் பயன்படுத்தக் கூடிய மீன் வகைகளையும் தாவர வகைகளையும் ஆண்டுக்கு 165 கோடி டன் வரையில் கடல் வாரிவழங்க முடியும். மக்கள் தொகை கணிசமாகப் பெருகியிருக்கப் போகும் 2000ஆம் ஆண்டில் உலக மக்கள் அனைவருக்கும்

> தற்போதைய நிலையிலேயே உலகில் ஜனத்தொகைப் பெருக்கமும், உணவு உற்பத்தியும் இருக்குமானால், அடுத்த நூற்றாண்டில் பயங்கர உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடும் என நிபுணர்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் இதோ, நான் இருக்கிறேன், என்னைப்பயன்படுத்துங்கள் என்று கடல் ஆர்ப்பரிக்கிறது. உலக மக்கள் அனைவருக்கும் உணவு அளிக்கக்கூடிய 'அட்சய பாத்திரமாக' கடல் விளங்குகிறது.

போதுமான அளவு புரதச் சத்து இதில் அடங்கியுள்ளது என்று சர்வதேச சத்துணவு மகாநாட்டுத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ஜோகிம் குனவ் கூறியுள்ளார்.

மீன், சத்து நிறைந்த உணவு. மீன்களை பெருமளவு பிடித்துப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்னும் 50ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக பயங்கரமாக நிகழவிருக்கும் கொடிய உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்கமுடியும். இதற்கு மற்றொரு முக்கிய வழி, திட்டமிட்ட குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம்.

(யு. பி. எஸ்.)

முன்னேறும் நாடுகள்4

# இந்தியா

### புவியியல்

பாரதம் என அழைக்கப்படும் இந்தியா உலகத்தினிலேயே பரப்பினில் ஏழாவது பெரிய தேசமாகவும், சனத்தொகையில் சீனாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தினிலும் உள்ளது. இதன் வடபகுதியின் எல்லை இமயமலை; கிழக்குப் பக்கத்தில் வங்காளவிரிகுடாவும், மேற்குப்பக்கத்தில் அரேபியன் கடலும், தெற்குமுனையின்கீழ் பாக்குநீரிணையும் அமைந்துள்ளன. இந்தியாவினிலேயே உலகத்திலுள்ள மிகவும் உயர்ந்த மலைச்சிகரங்களினை உடைய இமாலய மலைத்தொடர் வடபகுதி எல்லையில் அமைந்திருப்பது இதன் சிறப்புகளில் ஒன்றாகும் மிகவும் நீண்ட ஆறுகள் இந்து. கங்கை, பிரமபுத்திரா நதிகளாகும்.

இந்தியாவின் மொத்தப் பரப்பு 32,68,080.62 சதுர கிலோமீட்டராகும். இன்று இந்தியா அரசியல் நிர்வாகத்திற்காக:

ஆந்திராப் பிரதேசம்; அஸாம்; பிஹார்; குஜராத்; ஜம்மு-காஷ்மீர்; கேரளம்; மத்தியப் பிரதேசம்; தமிழ் நாடு; மஹாராஷ்டிரம்; மைசூர்; நாகலாந்து; ஒரிஸா; ராஜஸ்தான் பஞ்சாப் உத்தரப்பிரதேசம்; மேற்கு வங்காளம் என 16 ராஜ்யங்களாகவும் — அந்தமான் நிக்கோபார் தீவுகள்; பாட்ரு தாகர்ஹாவேலி; டில்லி; கோவா; டாமன், டியூ; ஹிமாசல்பிரதேசம்; லட்சதீவு; மினிக்கோ; அமினி தீவுகள்; மணிப்பூர்; புதுச்சேரி; திரிபுரம் என 6 யூனியன் பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

### சனத்தொகை

இந்தியாவின் மொத்தச் சனத்தொகை, (1961ம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம்) 43,90,72,582 மக்களாகும். சதுரமைல் ஒன்றிற்கு சனச்செறிவு 138 ஆகும். இச்சனத்தொகையே உலகின் மொத்தச் சனத்தொகையில் 14·6 நூற்றுவீதமாகும். இந்தியா சீனாவுக்கு அடுத்தபடியாக உலகில் சனத்தொகையில் இரண்டாவது ஸ்தானத்தினைப் பிடித்துள்ளது.

இங்குள்ள மக்கள் 60 பாஷைகளுக்கு மேல் பேசுகிறார்கள். இந்தியாவில் மொத்தமாகத் தமிழ்பேசும் மக்கள் 3,05,62,706. இந்துஸ்தானி பேசுபவர்கள் 1,23,200. ஹிந்திமொழி பேசுபவர்கள் 13,34,35,360 பேர்களாகும்.

### அரசியல்

ஒரு பிரஜைக்கு சமூக, பொருளாதார, அரசியல், நீதிநிர்ணய சுதந்திரம், சுயமான சிந்தனை, கருத்துக்களில் நம்பிக்கை வைத்தல், மத நம்பிக்கைகொள்ளக் கட்டுப்பாடற்ற சுதந்திரம், சமமான அந்தஸ்து, சட்டத்துக்குமுன் சகலரும் சமம், சமமான சந்தர்ப்பம், எல்லா இடங்களிலும் சகோதரத்துவமாக வாழ்தல் ஆகியன அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

21 வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பிரஜைகளுக்கும், வாக்குரிமை உண்டு. 21 வயதுக்கு மேற்பட்ட எந்த இந்தியப் பிரஜையும் அரசியல் பிரதிநிதித்துவ அமைப்புக்களில் போட்டியிடும் தகுதியுண்டு.

இன்றைய இந்திய லோகசபையில் (பார்லிமென்ட்—மக்கள் சபை) 504 பிரதிநிதிகள் உளர். அதில் 501 அங்கத்தினர்கள் மக்களால்தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள் இன்று லோகசபையிலுள்ள கட்சி நிலைமை:

காங்கிரஸ் கட்சியினர் 359 தேர்தலுக்குப்பின் ஏற்பட்டுள்ள ஆதரவாளர்கள் 6. சம்யுக்த சோஷலிச கட்சியினர் 14, ஆதரவாளர் 2, கம்யூனிஸ்டுகள் 15 ஆதரவாளர் 1, மார்க்ஸிஸ்டுகள் 10 ஆதரவாளர்கள் 2, ஜனசங்கம் 13, சுதந்திரக்கட்சியினர் 16 ஆதரவாளர்கள் 11, தி. மு. க. 8 ஏனைய கட்சியினர் 23, சுயேச்சைகள் 22 ஆகும்.

இன்று இந்திரா காந்தியைப்பிரதமராகக்கொண்ட 15 கபினற் அந்தஸ்துக்கள் உடைய மந்திரிகளும், 16 ஸ்டேட் மந்திரிகளும், 22 உதவி மந்திரிகளும், பொராளுமன்றக் காரியதரிசிகளும் உளர்.

தமிழ்நாட்டினில் 41 லோகசபை அங்கத்தவர்கள் உளர். அவர்களில் 31 காங்கிரஸ் அங்கத்தினர்கள், 8 தி. மு. க. அங்கத்தினர்களும், 2 மாக்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியினர்களுமுண்டு.

ராஜிய சபையிலும் மொத்தம் 228 அங்கத்தினர்களுண்டு. தமிழ்நாட்டிலிருந்து மொத்தமாக 18 அங்கத்தினர்கள். அப்துல் ஸமது, செள. லலிதா ராஜகோபாலன், எஸ். எஸ். வாசன், சி. என். அண்ணாதுரை (தி. மு. க. தலைவர்) ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

ராஜீய நிர்வாகம் லெஜிஸ்லேட்டிவ் கவுன்ஸில்(விதான் பரிசாத்) லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி (விதான் சபா) ஆகியவற்றினால் இயக்கப்படுகின்றன. லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளியே பிரதிநிதித்துவ அமைப்பாகும். தமிழ்நாடு லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளியில் மொத்தமாக 206 அங்கத்தினர்கள் உளர். இங்குள்ள கட்சி நிலைமை பின்வருமாறு:-

காங்கிரஸ் கட்சி 138, சுதந்திராக்கட்சி 6, கம்யூனிஸ்டுகள் 2, சோஷலிஸ்ட் ஆதரவாளர் 1, தி. மு. க. 51, போர்வாட் புளொக் 3 சுயேச்சை 4. திரு. பக்தவத்சலம் தலைமையில் தமிழ்நாடு [illegible] உண்டு.

(7-ம் பக்கம் பார்க்க)

# வல்லைவெளியை நினைக்கிறீர்களா?

செல்வச்சந்நிதி கோயிலில் இருந்து தெற்கு நோக்கி மூன்று நான்கு மைல்கள் உள்ள பிரேதசம் வல்லை வெளியென்று அழைக்கப்படும். வல்லைவெளி பேர் போன வெளி. இங்கே தற்சமயம் கூட பொலிஸ் காவல் தற்போது போதுமான அளவு இல்லை. இப்போது நெல்லியடி பொலிஸ் காவலுக்கு உட்பட்ட பகுதியாக இருக்கிறது. கோப்பாய் பொலிஸ் யாழ்ப்பாணம் போகிறவழியில் அயல்பொலிஸ்நிலையமாகும்

பழமையில் பயங்கரமூட்டும் கதைகள் நிரம்ப உள்ள இடம் இதுவாகும். 19 வருடங்களுக்கு முன்பு இருவர் மாண்டிருக்கிறார்கள். [illegible] ஆண்டுகளுக்கு முன்பு ஒர் ஆண்டில் 10 பேருக்கு குறைவில்லாமல் இங்கே மாண்டிருக்கிறார்கள். அயலில் சேகரித்த கதைகள் இவை. மேலும் ஆராய்ந்து இன்னும் சில விஷயங்கள் சேகரிக்க முடிந்தது.

மூன்றாண்டு காலத்திற்கு வர் | அடிகாயத்துடன் ஒருமுன் திரும்பியிருக்கிறார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் படுகாயங்களுடன்.

அரையாண்டு காலத்திற்கு அப்பால் ஒரு பெண் சாயங்காலவேளை தாக்கப்பட்டிருக்கிறார். துணைவந்த இருவர் தப்பி ஓடியிருக்கிறார்கள். வழிப்பறிசெய்யப்பட்டிருக்கிறார் பெண்.

அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு வழிப்போக்கன் அடிபட்டு அச்சுவேலியில் முறைப்பட்டுப் போயிருக்கிறார்.

இன்னும் அநேகம் சம்பவங்களுண்டு.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போதும் அதற்கு [illegible]ம் வசதியான காரனைத் தடுத்து வழிப்பறி செய்தல் இங்கிருந்ததென்பது எவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

சமீப காலத்தில் பொலிஸ் காப்பு இந்த இடத்தில் முறையாக உண்டு. காலையிலும், மாலையிலும் நெல்லியடிப் பொலிஸ்காரர்கள் ஜீப்பில் அச்சுவேலிக்கு வந்து கண்காணித்துப் போகிறார்கள். இதில் மூன்று ரோட்டுகள் 1. அச்சுவேலி-நெல்லியடி ரோட்டு, 2. ஆவரங்கால்-நெல்லியடி ரோட்டு, 3. அச்சுவேலி-தொண்டமானாறு ரோட்டு—காவலுக்கு உட்பட்டிருக்க வசதியாக இருக்கிறது.

இப்போது தகாதமுறையில் நடப்பவர்கள் வெளிப்[illegible]பாகத் தோன்றுவது [illegible]. குடியிற்காரர்கள் [illegible] தலைமயிர் அலங் [illegible] வளர்த்துக் [illegible] சந்தேகநபர்களா[illegible]ர்கள் குறைவு. [illegible] வெட்டுக்கத்தி ஆகி[illegible]ன் இந்த வழியில் [illegible]பவர்கள் குறைவு[illegible]ளுடன் பகலிலும் [illegible] நிற்பவர்கள் குறை[illegible].

தனிவழி [illegible]வர்களிடம் பண்[illegible] முறையில் பேசுப[illegible] குறைவு. தகாத கு[illegible]சாரணைகள் செய்பவர்[illegible]றைவு. தகாதமுறையில் [illegible]ழியில் தடுத்து தன்னைத் தெரியுமா? என்று பகைவளர்ப்பவர்கள் தொல்லைகள் குறைவு.

வல்லை வெளியில் மெச்சத்தக்க காவல் இன்னும் தேவை. முதலாவது பண்ணையிலிருப்பதுபோல் இந்த இரு ரோட்டுகளின் மத்தியில் பொலிஸ்நிலையம் அமைத்து இராக்காவல் வரவேண்டும். தங்க வசதியாக முழுக் கட்டிடமும், இருந்துவாழ முழுவசதியும் அதாவது சமையற்காரர் முதற்கொண்டு சகல வசதிகளும் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சம உரிமையோடு தமிழினம் வாழவேண்டும்"

## இதுவே காங்கிரஸ் இலட்சியம்

### என்கிறார் திரு. சிவசிதம்பரம்

மாவிட்டபுரம், வியா

"தமிழ் மக்கள் தங்கள் கலை. கலாசாரப் பண்பினைப் பாதுகாக்க விழையும் இந்துப் பல்கலைக்கழகத்தை எதிர்ப்பது நல்லதல்ல" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தெல்லிப்பளையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அரங்கில் தெல்லிப்பழை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணியின் 2வது வருடாந்த விழாவும், வரவேற்பு விழாவும் பிரமஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசியதாவது:

கல்வி, அரசியல், மொழி, சமயம் ஆகிய சகல துறைகளிலும் தமிழினம் சம உரிமைபெற்று வாழவேண்டும் என்பதே நமது இலட்சியம். இந்த இலட்சியத்தை ஒருபோதும் நாம் கைவிட்டதில்லை. தனிப்பட்ட அரசியல் விருப்பு வெறுப்புகளுக்காக இனத்தின் நலனைப் பலியிடக்கூடாது. தேசிய ஐக்கியத்தில் நமது கட்சி பூரண நம்பிக்கை கொண்டது. அதனை உருவாக்குவதற்குரிய தகுதி, திறமை எமக்குண்டு. எமது தலைவர் திரு. ஜி. ஜி. இரண்டாவது தடவையாக நாட்டின் பிரதமரால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்டமை எமக்கு மட்டுமல்ல, தமிழினம் முழுமைக்குமே பெருமையளிப்பதாகும். உலக நாடுகள் மத்தியில் ஈழத்தின் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்மகன் நாட்டின் பிரதிநிதியாக வீரமுழக்கம் இடுவதனைப் பொறுக்கமாட்டாதவர்களை என்னவென்பது? எமது இலட்சியத்தின் வழிசென்றால் திரு. ஜி. ஜி. பெற்றிருக்கும் உலகப் புகழ் பெற்றிருக்கும் நிலையை நமது இனமே பெறமுடியும் அதனால் நமது மொழியும் கலாசாரமும் பண்பாடும் பாதுகாக்கப்படும் தமிழ் இளைஞர்கள் தாய்மார்கள் பெரியோர்கள் அனைவரும் இதனை உணரவேண்டும். இந்த நாட்டில் தமிழ்பேசும் இனம் சுதந்திரமாக தன்மானத்துடன் வாழ நமது உரிமைகளைப் பெறப் போராட முன்வரவேண்டும்.

#### சைவப்பண்பாட்டை பாதுகாக்கவேண்டும்

விழாவுக்குத் தலைமை வகித்த பிரமஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் கூறியதாவது:

"தமிழ்பேசும் மக்களில் பெரும்பான்மையோர் சைவர். அவர்களுடைய மனதைப் புண்படுத்தும் வகையில் சில அரசியல் வாதிகள் நடவடிக்கைகள் மேற்கொள்வது விரும்பக்கூடியதன்று. சைவப்பண்பாட்டை அழித்துக் குழி தோண்டிப் புதைக்க இவர்களிற் சிலர் முன்வந்துவிட்டார்கள். தம்மால் முடியாத ஒரு கருமத்தைச் செய்த தமிழ்நாட்டிலிருந்தும், வெளியூரிலிருந்தும் பிரசார இயந்திரங்களைக் கொண்டுவந்து தாம் ஒன்றும் செய்யாதவர்களைப் போல நடிக்கிறார்கள்.

இந்த நிலையில் தமிழ்மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றைப் பாதுகாக்க அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். இப்போது பிழையான வழியிற் செல்வோரை நல்வழிப்படுத்தவேண்டும். திரு சிவசிதம்பரம் இத்துறையில் தமிழ்ச் சமுதாயத்துக்கே வழிகாட்டக்கூடியதாக இருக்கிறார்."

திருவாளர்கள் நாவேந்தன், மோதிலால் நேரு, வி. ஆனந்தசங்கரி ஆகியோர் பேசியபின் வழக்கறிஞர் திரு. சி. அருளம்பலம் பேசுகையில் தேர்தலில் வெற்றி ஒன்றினைமட்டும் நோக்காது தமிழினத்துக்குப் பணிசெய்வதுதான் தமிழ்க்காங்கிரஸ் இலட்சியம் என்று குறிப்பிட்டார்.

வழக்கறிஞர்கள் தா. சங்கரப்பிள்ளை, சிவ. ஸ்ரீதரன் திருவாளர்கள் எஸ். கனகராஜா, வி. இரத்தினராஜா, வே. சங்கரப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

தெல்லிப்பளை தமிழ்க் காங்கிரஸ் கிளையின் சார்பில் பாராட்டுப் பத்திரம் ஒன்று திரு. சிவசிதம்பரத்துக்கு வழங்கப்பட்டது. வாலிப முன்னணி நடத்திய சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம் பரிசுகள் வழங்கினார்.

## தற்கொலை செய்ய முயற்சித்தவர்

### மாஜிஸ்த்ரேட் முன் ஆஜர்

சங்கானை, வெள்ளி

தற்கொலை செய்ய இரு தடவைகள் முயற்சித்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மாஜிஸ்திரேட் முன்னர் ஆஜர் செய்யப்பட்ட சம்பவம் அராலியில் நிகழ்ந்துள்ளது.

அராலி தெற்கைச் சேர்ந்த எஸ். சுப்பிரமணியம் (24 வயது) என்பவர், மயானத்துக்குச் சென்று கழுத்தில் சுருக்கிட முயற்சித்தார் என்றும் இதில் அவர் தோல்விகாணவே கடலில் குதிக்க முயன்றாரென்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி இவரது உறவினர் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே, மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

## இந்தியா...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் மிகவும் உயர்ந்த ஸ்தாபன அமைப்பு காப்பரேஷனாகும். கடைசிப் படியில் உள்ளது கிராமப் பஞ்சாயத்தாகும்.

இங்கு 62 சர்வகலாசாலைகள் உள. தமிழ் நாட்டில் உள்ள சர்வகலாசாலையில் முக்கியமானவைகள் சென்னைப் பல்கலைக்கழகம். இதன் நிர்வாகத்தினில் 117 கல்லூரிகளும் 62,010 பட்டதாரி வகுப்பு மாணவர்களும் இருக்கிறார்கள். அண்ணாமலை சர்வகலாசாலையில் 3120 மாணவர்கள் உளர். நாகபுரி சர்வகலாசாலையில் 58 கல்லூரிகளும் 31,133 பட்டதாரி மாணவர்களும் உளர்.

இந்தியாவின் ஜனாதிபதி சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணனாகும். இவர் உலகத்திலுள்ள தத்துவஞானிகளில் ஒருவர்.

ரவீந்திர நாததாகூர் அவர்கள் வங்காளி பாஷையில் இயற்றிய "ஜன-கன மன-ய" என்ற பாடலையே இந்தியக் குடியரசின் தேசிய கீதமாக 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ந் தேதி ஆக்கப்பட்டது. இத்தேசிய கீதம் முதன்முதலில் 1911ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி முதன்முதலாக கல்கத்தாவில் நடைபெற்ற தேசிய காங்கிரஸ் மகாநாட்டில் பாடப்பெற்றது.

இன்று இந்தியாவின் தலைவிதியினை நிர்ணயிக்கும். பொறுப்பினை உடையவர் இந்தியாவின் தேசியகாங்கிரஸின் தலைவராகும் இதன்தலைவர் காமராஜர்.

இந்தியாவின் குடியரசு தினப்பட்டங்களாக ஜனாதிபதி வழங்கும் சிறப்புப் பட்டங்கள் பின்வருவனவாகும்; பாரதஇரத்தினம்; பத்ம விபூஷணம்; பத்மபூஷணம்; பத்மஸ்ரீ: பரம் வீரசக்கரம்; மஹாவீரசக்கரம்; வீர சக்கரம்; அசோகச்சக்கரம், 1, 2, 3; லைசிஸ்டு சேவா பதக்கம் 1, 2, 3; ஜீவன் ரக்ஷப்பதக்கம் 1, 2, 3; விளையாட்டு வீரர்களுக்காக அர்ஜீனப்பதக்கம் ஆகியவைகளே.

### பொருளாதாரம்

இந்தியா ஓர் அபிவிருத்தி அடையும் நாடாகும். ஐந்தாண்டுத்திட்டங்கள் மூலம் இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திஓரளவு வளர்ந்து வருகின்றது. ஆனால், சமீபத்தில் இந்தியாவின் எல்லையில் ஏற்பட்ட சீன, பாகிஸ்தான் தகராறுகளில், இந்தியா பொருளாதார அபிவிருத்தியிலிருந்து விலகி, எல்லைக்கண்காணிப்பு, யுத்ததளபாடத்தயாரிப்பு ஆகியவைவற்றில் கவனம் செலுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றது.

-கே ரி. ஆர்-

## "கத்தியால் கழுத்திற்கு ஓங்கினார் ஆனால் கையில்தான்பட்டது"

### தீர்ப்பு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி வாடிவீட்டுக் காப்பாளர் வி. சுப்பிரமணியம் என்பவரைக் கத்தியால் வெட்டியதாகக் கந்தையா சோமு என்பவர் மீது சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வி. சுப்பிரமணியம் கூறியதாவது:

நான் மாலை 4-30 மணிக்கு சந்தைக்கு சென்றேன். பஸ் நிலையத்தடியில் எதிரி சோமு என்னை நோக்கிவந்து கத்தியால் எனது கழுத்துக்கு ஓங்கினார். நான் கையைக்கொடுத்தேன் கையில் பட்டது. நான் உடனே வாடி வீட்டிற்குச்சென்று அங்கு இருந்த பொலிஸ்இன்ஸ்பெக்டரிடம் கூறியபின் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்." மற்றும் கி. சின்னத்தம்பி பொலிஸ் சார்ஜண்ட் க. முத்துக்கிருஷ்ணன் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

வழக்காளி தரப்பில் புறக்டர் வி. செல்லத்தம்பி சாவகச்சேரிப் பொலிசாரின் உதவியுடன் வழக்கை நடத்தினார்.

எதிரி தமக்காகத் தாமே வாதாடினார். மாஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பை ஒத்திவைத்தார்.

## 18-வருட சாம்பியன் போட்டிகள் ரத்து

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அமைச்சூர் விளையாட்டு சங்கத்தின் ஆதரவில்ஒழுங்கு செய்யப்பட்ட 18-வது வருட சாம்பியன் விளையாட்டுப் போட்டிகள் 27ம்திகதி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. 9கழகத்தாருக்கிடையான இப்போட்டிகளைத் தொடர்ந்து இரண்டு நாட்கள்வரை நடத்த ஒழுங்கு செய்யப்பட்ட போதும் கடுமையான மழைகாரணமாக இப்போட்டி முதல் நாளுடன் ரத்துச்செய்யப்பட்டுவிட்டது. அடுத்துஎடுக்கப்படும் நடவடிக்கையை சங்கம் தனது நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கும்.

## இன்று ஆரம்பமாகும் சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சிப் பாடசாலைகட்கிடையே நடைபெறும் வருடாந்த உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி அக்டோபர் மாதம் 1-ந் திகதி ஆரம்பமாகின்றது. கடந்த வருடம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாம்பியனானது இம்முறையும் ஹாட்லிக் கல்லூரி தனது சாம்பியன் பட்டத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உடுப்பிட்டி அ. மி கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றிற்குமிடையே கடுமையான போட்டி நடைபெறவிருக்கிறது.

## இருமுத்திரைகள் வெளிவரும்

கொழும்பு, வெள்ளி.

சர்வதேச அரிசி தினத்தை முன்னிட்டு இலங்கை அரசாங்கம் இரண்டு முத்திரைகளை வெளியிட தீர்மானித்துள்ளது இம்முத்திரைகள் இம்மாதம் 25ந் திகதி வெளியிடப்படும்.

## மழையிலும் வேலை செய்தனர்

பலாலி, வெள்ளி.

அடைமழையிலும் காங்கேசன்துறை துறைமுகத் தொழிலாளர் தங்கள் சிரமத்தையும்பாராது வேலையில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாணக் கூட்டுறவுத் துறைமுகத் தொழிலாளரே இச்சாதனையை நிலைநாட்டினர், 'ரக்ஸ்கறிஸ்' என்ற கப்பல் சைப்பிரஸ்ஸிலிருந்து சிமெந்திற்கு சேர்க்க வேண்டிய உப்பொன்றை இங்கு கொண்டுவந்ததென் பது குறிப்பிடத்தக்கது.


கல்கிபீடி 786 கல்கிபீடி

ஆண்டாண்டு காலமாக புகைப்பவர்களுக்கு உற்சாகத்தையும், விறுவிறுப்பையும், புத்துணர்ச்சியையும் அளித்து, இலங்கையில் விற்பனை செய்யப்படும் பீடிகளில் ஈடு இணையற்று விளங்குவது

786 கல்கி பீடி

தரமறிந்து புகைப்போர் வற்புறுத்தி, தேடி வாங்கிப் புகைப்பது

786 கல்கி பீடி

இலங்கையின் சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தவாறு காரம், மணம், குணம் நிறைந்தது

786 கல்கி பீடி

சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

786 கல்கி பீடி

இன்றே புகைத்துப் பாருங்கள்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

சி. சின்னத்துரை & பிரதர்

44, 3-ம் குறுக்குத் தெரு, :: :: கொழும்பு.

தொழிற்சாலை:

79 & 81, மெசஞ்சர் வீதி, கொழும்பு 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று முதல் புதிய 'எக்ஸ்பிரஸ்' பஸ் சேவை

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் புதிய கடுகதி பஸ் சேவையொன்று இன்று ஆரம்பமாகும். இப் புதிய சேவை கொடிகாமத்தில் இருந்து காலை 8 மணிக்கு புறப்படும்.

அரசாங்க ஊழியர்களுக்கும், வர்த்தக ஊழியர்களுக்கும், வியாபாரிகளுக்குமாகவே இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இச்சேவை நல்ல பயனளித்தால், மாலை நேரத்திலும், கடுகதிசேவையொன்று விடப்படுமென்று கிழக்கு டிப்போ அதிகாரி திரு. ஆர். ராஜேந்திரன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இப்புதிய கடுகதிசேவை, கொடிகாமத்திலிருந்துபுறப்பட்டு, மீசாலை, சாவகச்சேரி, நுணுவில், நாவற்குழி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மட்டுமே தங்கும்.

பஸ் பிரயாணிகள் சங்கங்கள் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்தே இப்புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## வெளியேறுவதை தவிர . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய விளைவுகளையும் எடுத்து விளக்கிக் கூறவிருக்கிறது.

போதனா மொழியைப் பெற்றோர் தெரிவு செய்து கொள்வதற்கு உரிமையளிக்க கல்வி வெள்ளை அறிக்கையில், கல்வி அமைச்சர்வகை செய்திருப்பது வேண்டுமென்றே மறைமுகமாக கல்வி அமைச்சர்செய்துள்ள ஒரு காரியமென்று தமிழரசுக்கட்சியின் பாரிலிமென்டரிக் குழுகருதியது. போதனாமொழிப் பிரச்னை முன்னர் எழுந்தபோது, பிரதமரைத் தாங்கள் சந்தித்து தாய் மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமென வற்புறுத்திய போது போதனா மொழி சம்பந்தமாக பிரதமர் ஒரு சமரச யோசனை தெரிவித்தாரென்றும் அந்தச் சமரச யோசனையைக் கூட கல்வி அமைச்சர் தமது வெள்ளை அறிக்கையில் குறிப்பிடாமல்தமது திட்டத்தையே தெரிவித்திருக்கிறாரென்றும் பாரிலிமென்டரிக்குழு கருத்துத் தெரிவித்தது.

போதனா மொழியைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றோருக்கு அளித்தால், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள மாகாணங்களிலுள்ள தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழ்மூலம் கல்வி கற்பதற்கான வசதிகளை கல்வி அமைச்சு செய்யமாட்டாதென்றும் இதனால் வெளி மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் போதனா மொழியாக சிங்களத்தையே தெரிவுசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்றும் தமிழரசு எம். பி. க்கள் கருத்துத் தெரிவித்தனர்.

தங்கள் பிள்ளைகளுக்குசிங்களம் படிப்பிக்க விரும்பும் வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள முஸ்லிம் பெற்றோர் கூட தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களத்தைப் போதனா மொழியாகத் தெரிந்தெடுக்கமாட்டார்களென்றும் பாரிலிமென்டரிக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

பாரிலிமென்டரிக்குழுவின் தீர்மானத்தை பிரதமரைச் சந்தித்து உறுதியாகத் தெரிவிப்பதென முடிவு செய்யப்பட்டது.

## வெள்ளத்துக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வும் வடற்படைப்படகுகளையும்ஹெலிகாப்டர்விமானத்தையும் அனுப்பிஉதவும்படிகாலிமாவட்ட அரசாங்க அதிபர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

களுகங்கையின் நீர்மட்டமும் உயர்ந்துகொண்டிருக்கிறது.

களுத்துறையில் வெள்ளத்தில் விளையாடிக்கொண்டிருந்த டக்ளஸ்,நோமன் என்ற இரு சிறுவர்கள் சுழியில் அகப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர். இவர்களின் சடலங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

கண்டியில் மண்சரிவு ஏற்பட்டதால் மலையடிவாரத்திலிருந்து ஒடு சிறுவனும் ஒரு சிறுமியும் மாண்டனர். சென்ற திங்கட்கிழமைஇரத்தினபுரியில் இருஇளைஞர்கள் பலியானர்கள்.

நாவலப்பிட்டியில் பலத்த மழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கிறது. பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. மஸ்கெலியா, நோர்ட்டன் பிரிட்ஜ் ஆகிய இடங்களில் பலத்த காற்றுடன்பெரு மழைபெய்திருக்கிறது.

## தேவை

சகலவசதிகளுடனும்வாடகைக்கு வீடு உடனடியாக தேவை. மில்க்வைற்சோப்பு தொழிற்சாலைக்கும் இந்துமகளிர் கல்லூரிக்கும் இடையில் விரும்பத்தக்கது. செ. வேல்சாமி, மில்க்வைற் சோப்பு தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 1121

## விற்பனைக்கு

கார்

2 சிறீ 3000 தொடர்புடைய வோக்ஸிறிபெக்ற் விற்பனைக்கு உண்டு. முழு வேலைகளும் செய்யப்பட்டது. இலக்கம் 133, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவும். திகதி1-10-66லும்,2-10-66லும், அதற்குப் பின், ஆசீர்வாதம் பாம், ஒமந்தையில் பார்வையிடலாம். 1290

ஐ. நா. வில்

# இந்திய-பாக் பிரதிநிதிகளிடையே காரசாரமான விவாதம்

ஐ. நா, நியுயோர்க், செப். 30

ஐ. நா. மகாசபையில் நேற்று இரவு இந்தியப்பிரதிநிதி சர்தார் சுவர்ண்சிங் இந்திய-பாகிஸ்தான் உறவு பற்றி பேசிக்கொண்டிருக்கையில் பாகிஸ்தான் பிரதிநிதி குறுக்கிட்டுபேசியதைத் தொடர்ந்து இருவருக்குமிடையே காரசாரமான விவாதம் இடம் பெற்றது. சர்தார் சுவர்ண்சிங் பேசிமுடித்ததும் பாகிஸ்தான் வெளி நாட்டு மந்திரி ஸரியுதீன் பிர்ஸாதா பேசுவதற்கு முன்பதாவே மகாசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தியா வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் பேசுகையில், வேற்றுமைகளைத் தீர்த்துவைக்கும் பொருட்டு பேச்சுக்கள் நடத்துவதற்கு பாகிஸ்தான் முன் வரவேண்டுமென்று ஐ. நா. வில் அழைப்புவிடுத்தார்.

"நேரடியான பேச்சுவார்த்தைகள் மூலம் இருநாட்டுப் பிரச்னைகளையும் தீர்க்கவே இந்தியாவிரும்புகிறது. டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை இந்தியா பற்றி நிற்கிறது இந்த ஒப்பந்தத்தின் மூலம் தீர்வு காணவே நாம் விரும்புகின்றோம். இதற்கு பாகிஸ்தான் சம்மதிக்க வேண்டும்'' என்று சர்தார் சுவர்ண்சிங் கூறியபொழுது பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி குறுக்கிட்டு ஜம்மு காஷ்மீர் பிரச்னை குறித்து பேச்சுக்கள் நடத்தத் தயாரா என்று கேட்டார்.

இதற்கு இந்திய வெளிநாட்டு மந்திரி பதிலளிக்கையில் முன்நிபந்தனையில்லாது பேச்சுக்கள் நடத்துவதற்கு இந்தியா எப்பொழுதுமே தயார் என்றும் பாகிஸ்தான் விஷயங்களைப் பரிசிலனை செய்யும் அதே கட்டத்தில் இந்தியா தெரிவிக்கும் விஷயங்களையும் விவாதிக்க பாகிஸ்தான் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பேசுவதற்குள்ளாகவே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் பாக். மந்திரி பேசுகையில் பேச்சுக்கள் நடத்துவதற்கு இந்தியாவே முட்டுக்கட்டையாக விருக்கிறது என்று குற்றம் சுமத்தினர்.

# "சேர் கந்தையாவின் கனவை நனவாக்க வேண்டும்"

## திருஞானசம்பந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

"கொள்கைக்காக வாழ்கின்ற வாழ்விலே தான் மனிதன் உண்மையைக் காண்கின்றான். உண்மையும் நிலைத்துவமுமான திருத்தொண்டையே இலட்சியமாகக்கொண்டு நம்மிடையே வாழ்ந்தவர் சேர் கந்தையா வைத்திநாதன். அவர் சிந்தையும் செயலும் திருக்கேதீஸ்வர நாதனின் திருக்கோவிலைப் பற்றியதாகவே இருந்தது. அவர் எதைப் பேசினாலும் அதைப் பற்றியதாகவே அமைந்திருந்தது. அத்தகைய மகான் இன்று இல்லை "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் எந்தையுமுடையோம் எம் குன்றும் பிறர் கொளார்'' இவ்வாறு கபிலர் பாரியின் குழந்தைகள் வருந்துவதாகப் பாடுகிறார். அத்தகைய துன்பநிலையில் யாம் இன்று நிற்கின்றோம். நம் மத்தியிலே வாழ்ந்து திருக்கேதீஸ்வரப்பணியையே தன் பணியாகக் கொண்ட அவர் இன்று இல்லை. ஆனால் அவர் கண்ட உயர்ந்த கனவுகளை நனவாக்கவேண்டுவது நம் கடமையாகும்''

இவ்வாறு திரு. அ. ச. ஞானசம்பந்தன் நேற்று வைத்தீஸ்வர வித்தியாசாலையில் "கம்பன் கண்ட அரசியல்'' என்னும் விடயம் பற்றியச் சிறப்புச் சொற்பொழிவுக்குப்பின் கூறினர்.

## புதிய பாதையில் புகையிரதம்

வவனியா, வெள்ளி

நேற்று மாலை மாங்குளத்துக்கும் முறிகண்டிக்குமிடையில் உள்ள 4 மைல் தூர புதிய புகையிரதப்பாதையில் முதல் புகையிரத சேவை ஆரம்பமானது. இதன் ஆரம்பவிழாவை இப்பகுதிபுகையிரதநிலையப் பொறுப்பதிகாரி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

## பம்பலப்பிட்டி தேர்தல்மனு தள்ளுபடி

கொழும்பு, வெள்ளி

பம்பலப்பிட்டியாதொகுதிக்கு திரு. எல். பி. டி. சில்வா தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கவேண்டும் எனக்கோரித் தாக்கல் செய்யப்பட்டமனுவை விசாரணை செய்த நீதியரசர் திரு. எல். பி. டி. சில்வா' அந்த மனுவைச் செலவுதொகையுடன் இன்று தள்ளுபடி செய்தார்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பொன்னம்மா

காலஞ்சென்ற முல்லைத்தீவைச்சேர்ந்த திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின் மனைவியும், சிவப்பிரகாசம், இளையதம்பி, (முல்லைத்தீவு இளைப்பாறிய போஸ்ட்மாஸ்டர்) கனகரட்ணம் (மூனு கம அரசினர் ஆஸ்பத்திரி அதிபர்) திருமதி குருநாதபிள்ளை தங்கரத்தினம் ஆகியோரது தாயாருமான திருமதி கணபதிப்பிள்ளை பொன்னம்மா நேற்றுக்காலமாகிவிட்டார்.

[illegible] 1013

## தொடம்பே,..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தட்டியபொழுதுதகாதவார்த்தைகளைப் பேசிக்கொண்டு அவர் வெளியில் வந்தார். நேரந் தாமதித்து வந்து தன்னை ஏன் தொந்தரவு செய்வதாகக் கேட்டார். நான் மிகவும் பணிவாக விஷயத்தைக் கூறினேன். அவர் என்னை உட்காரும்படி உத்தரவிட்டார். பொலிஸாரைக்கொண்டு என்னை அடிப்பிக்கப்போவதாக டாக்டர் கூறினர்.

டாக்டர் தொலைபேசி மூலம் பொலிஸ் கான்ஸ்டபிளை அழைத்தார். டாக்டர் என்னை பயமுறுத்தியதாகவும் ஒரு வாக்குமூலமளிக்க விரும்புவதாகவும் நான் கான்ஸ்டபிளிடம் கூறினேன். கான்ஸ்டபிள்கூட எனக்கு உதவியளிக்காமல், உதைவாங்குமுன் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறுமாறு கூறினர்.

நான் பொலிஸ் நிலையத்திற்கு எனது நண்பனுடன் சென்றேன். அங்குள்ள சார்ஜனிடம் நடந்தவற்றைக் கூறினேன். அவர் எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய மறுத்தார். தொடர்ந்து கரைச்சல் கொடுத்தால் சரியானபாடம் படிப்பிக்கப் போவதாக சார்ஜண்ட் பயமுறுத்தினர்.

எனது முறைப்பாட்டிற்குச் செவிசாய்க்குமாறு மிகவும் தாழ்மையான வேண்டுகோள்விடுத்தேன். தொடர்ந்து தொந்தரவு செய்தால் தொடம்பே முதலாளியைப் போல் தூக்கி எறியப்படுவீர் என்று சார்ஜண்ட் கூறினர்.

உடனடியாக நான் நிலையத்தைவிட்டு வெளியேறினேன். பொலிஸ் சுப்பிரிண்டனிடம் செல்வதைத் தவிர வேறு வழியில்லையென்று நான் கூறிவிட்டு வெளியில் வந்தபோது, சார்ஜனும்மற்றும் பொலிஸாரும் என்னைத் துரத்தி வந்து தாக்கினர்கள் என்னையும், நண்பனையும் சிறைக் கூண்டில் பூட்டினர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாலும் சரி, பிரதமமந்திரியாலும் சரி தான் கவலைப்படப் போவதில்லையென்றும், தான் தேவையானதைச் செய்வாரென்றும் சார்ஜன்ட் கூறினர்.

பின்னர் என்னையும் நண்பனையும், சட்டவைத்திய அதிகாரியிடம் ஜீப்பில் கொண்டு சென்றார்கள். அவரிடம் நான் விஷயத்தைக் கூறி, பொலிஸ் நிலையத்திற்குப் போக அஞ்சுவதாகக் கூறினேன். அங்கிருந்து, பொலிஸ் சுப்பிறிண்டனுக்கு போன் செய்ய விரும்பினேன். அவர் அதற்கு சம்மதிக்கவில்லை. மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். ஆனால் மறுமுறை எங்களைத் தாக்கவில்லை. மறுநாள் காலை எங்களின்வாக்கு மூலத்தைப் பதிவு செய்த பின், பிணையில் விட்டார்கள். இதுபற்றிய பூரண விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை - பாரத ஹாக்கி போட்டி

## வெற்றி தோல்வியில்லை

புதுடில்லி, செப். 30

இலங்கை ஹாக்கிக் கோஷ்டிக்கும், பாரத ஹாக்கிக் கோஷ்டிக்குமிடையில் இங்கு இன்றுமாலை நடைபெற்ற 3-வது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. ஒவ்வொரு கோஷ்டியும் தலா 3 கோல்கள் போட்டன, ஏற்கெனவே நடைபெற்ற 2 டெஸ்ட் போட்டிகளில் பாரத கோஷ்டி வெற்றி பெற்றுக் கொண்டது.

## சுபந்திரியோ வழக்கு இன்று ஆரம்பம்

ஜாகர்த்தா, அக். 1

இந்தோனேஷியா முன்னாள் வெளியுறவு மந்திரி சுபந்திரியோ மீதான வழக்கு இன்று இங்கு ராணுவ நீதிமன்றத்தில் ஆரம்பமாகிறது. அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## இந்திரா நம்பிக்கை

ஸ்ரீநகர், செப், 30

கூட்டு நடவடிக்கை மூலம் பாரத - பாகிஸ்தான் பிரச்னையைத் தீர்க்கலாமெனபிரதமர் ஸ்ரீமதி இந்திரா நம்பிக்கை தெரிவித்துள்ளார். இங்கு நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில், பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்னைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கலாமென்றூர்.

## யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

மின்சார நிலையவீதியில் கண்டெடுக்கப்பட்ட இரு பைசிக்கிட்டரிசிப் புத்தகங்களை பொ. பாலதராஜா என்பவர், ஈழநாடுக் காரியாலயத்தில் ஒப்படைத்திருக்கிறூர். உரியவர்கள் பெற்றுக் கொள்ளலம்.

* * *

யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோருக்கு முன்னால் கண்டெடுக்கப்பட்ட பிறப்புச்சாட்சிப் பத்திரத்தை இ. வேலாயுதம் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## பல்கலைக்கழகம் 7ல் ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை பல்கலைக் கழகம் இம்மாதம் 7-ம் தேதி ஆரம்பமாகிறது. பல்கலைக் கழகத்துக்குப்புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org